இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்



# என்றுவது ஒருநாள்...?

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

SITHY VINAYAGAR
EK-154
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# என்றுவது ஒருநாள்...?

(குறுநாவல்)

SITHY VINAYAGAR
GK-154
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

# முன்னுரை

ஈழத்தின் இன்றைய இளந்தலைமுறை எழுத்தாளர்களில், ஆக்கவிலக்கியகர்த்தாக்கள் வரிசையில் சேர்க்கக்கூடிய ஒருசிலரில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஒருவர். அவருடைய அண்மைக் காலச் சிறுகதைகள் அவருடைய சமூகப் பார்வையின் தெளிவையும் நோக்கையும் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

சிறுகதை எழுத்தாளர்களாகக் காலடி பதிப்பவர்கள் தாம் கூறவேண்டிய கருத்துக்களைப் பொதிப்பதற்குச் சிறுகதை வடிவம் போதாததாக மாறும் போது, நீண்ட புனை கதை வடிவமொன்றினைத் தெரிந்தெடுப்பது தவிர்க்க முடியாதது. இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இந்தப் பரிணாம வளர்ச்சிக்குப் புறநடையாகவில்லை. ''என்றாவது ஒரு நாள்...?'' என்ற இந்தப் புனைகதையின் வடிவம் குறுநாவலா, நீண்ட சிறுகதையா என்பது சர்ச்சைக்குரியதாயினும், தீர்வு ஹெமிங்வேயின் 'கடலும் கிழவனும், போன்றதாயமையும். கதை நிகழும் கால அளவு, களம், கதாமாந்தர்களின் எண்ணிக்கை' கூறும் கரு என்பன இப்புனைகதை பின்னைய வடிவத்திற்கே மிகப் பொருத்தமானது எனப் புலப்படுத்துகின்றன.

ஒரு கிராமத்துப் பாடசாலைக்கு மாற்றலாகி வரும் மனைவியை இழந்த ஞானசுந்தரம் ஆசிரியர், சமூக வஞ்சனைக்குள்ளாகிய ஒரு பெண்ணின் மீது காட்டும் இரக்கமும் அதன் விளைவும் இந்தப் புனை கதையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஐந்தே ஐந்து கதா மாந்தர்கள் ஆசிரியர் ஞானசுந்தரம், அவருக்கு துணைவரும் கந்தசாமி, கணவனால் துயருறும் கோமதி ரீச்சர்; கணவன் வெளிநாட்டிலிருக்க இங்கு தன்னை அலங்கரித்து பிறர் காரில் சுகம் காணச் செல்லும் சகுந்தலா; அறியாப் பருவத் தவறால் அல்லலுறும் வசந்தா: இந்த ஐந்து கதா பாத்திரங்களில் கந்தசாமி, கோமதி, சகுந்தலா ஆகிய மூவருக்கும் சமூகச் சூழலுக்கு மிடையே உருவாகும் முரண்பாடுகளில், சமூகத்திற்குப் பயந்து அல்லது பயந்தது போலக் காட்டி அவர்கள் சமூக நியதிகளுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். ஆசிரியர் ஞானசுந்தரமும், வசந்தாவும் தனிமனிதருக்கும் சமூகச் சூழலுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றும் போது, சமூகச் சூழற் குறைபாடே தனிமனிதப் பிரச்சனைக்குக் காரணமெனவுணர்ந்து, அச்சூழலை மாற்றியமைக்க முயல்பவர்கள். எனவே முன்னவர்கள் பழைமையின் பிரதிநிதிகளாக சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட முடியாதவர்களாகத் தவிக்க பின்னவர்கள் சமூகக் கட்டுப்பாட்டு தளைகளை தகர்த்து எறிந்து புதியதொரு சமூக சூழலை பிறப்பிக்க விழைகின்றனர். இவ்வாறு இப்புனை கதையின் கதா மாந்தர்கள் அமைந்தமை இதன் சிறப்பிற்குக் காரணமாகவுள்ளது எனக் கருதுகின்றேன். அதனால் தான் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் சமூகப்பார்வை ஆழமும் அகலமும் கொண்டதாக அமைந்திருப்பதோடு, அதன் வழி பிறக்கும் ஆக்கங்கள் சமூகப் பயன் தருவன வாகவுமுள்ளன.

யதார்த்தம் என்பது உள்ளதை உள்ளவாறு கூறுவது அல்லது உள்ளதை உணர்ந்தவாறு கூறுவது; என விளக்கந்தருகின்றனர். சமூகம் இப்படி இருக்கிறது, என்பதை புனைகதைகளில் சித்திரிப்பதை விட சமூகம் எப்படி இருக்கவேண்டும் என்று தனது ஆளுமைக்கும்தனது விழுமியங்களுக்கும் இணங்க புனை கதையை சித்தரிக்கும்போது அது ஆக்க இலக்கியமாக மாறுகிறது. அவ்வகையில் இணுவையூர் ''சிதம்பர திருச்செந்திநாதனின் இப்புனைகதையின்இறுதிவரி வசந்தா என்னுடன்வந்து விடு!'' சமூகக்கட்டுப்பாடுகளைத்தகர்த்தெறிகிறதுபுதிய சமூகப்பரிமாணத்தைத் தருகிறது.

ஆசிரியரின் எளிமையான நடை; கதையை நினைவோடையில் நகர்த்தும் உத்தி. படிப்பவர்களைக் களைப்பின்றிச் சுவைத்து சிந்திக்க வைக்கிறது. பாத்திர வளர்ச்சியில் ஏற்படும் சறுக்கல்கள் சில விடத்திலுள்ள போதிலும் அது முதிரா இளமையின் அனுபவக் குறைபாடு எனக் கொள்வதில் தவறில்லை. ஆசிரியரின் முதலாவது நெடுங்கதை இது? இனி அவர்படைக்கும் புனைகதைகள், தமிழிலக்கியத்தைஅணிசெய்ய இந் நூல் முதற்படியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

உதவி அரசாங்க அதிபர்.
(தலைமைப்பீடம்)
கச்சேரி—கிளிநொச்சி

செங்கை ஆழியான்

- என்றாவது ஒருநாள்...?
(குறுநாவல்)
- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
கச்சேரி· யாழ்ப்பாணம்
- அட்டை வி. கனகலிங்கம் ( வி. கே. )
- முதற் பதிப்பு 1986 வைகாசி
- விலை ரூபா ( 10- )

- ENDRAWATHU ORU NARL
(SHORT NOVEL)
- INUVAIYOOR SITHAMPARA
THIRUCHCHENTHINATHAN
KACHCHERI – JAFFNA
- COVER: V. KANAGALINGAM
- FIRST EDITION 1986 MAY
- PRICE-TEN RUPEES (10-)


EARLALAI WEST
CHUNNAKAM
IBRARY

# என்னுரை

''என்றாவது ஒருநாள்...?'' என்னும் இந்தக் குறு நாவலை நூலாக வெளியிட வேண்டும் என்று நான் சிறிதும் எதிர் பார்த்திருக்கவில்லை.

வெகு காலமாகவே சிறுகதை தொகுப்பொன்றினை யாவது வெளியிட வேண்டும் என ஆவலோடு இருந் தும் பலவித காரணங்களால் அந்த ஆவல் பிற் போடப்பட்டுக் கொண்டே போகின்றது.

இந்தநிலையில் சிலகாலத்துக்கு முன்னர் நண்பர் எஸ். எஸ் குகநாதன் தனது ''ரஜனி'' மாத வெளியீட் டுக்காக ஒரு குறுநாவலை தரும்படி கேட்டார்.

எனது கைவசம் அப்போது மித்திரன் வாரவெளி யீட்டில் வெளியான (1980ல்) இக்குறுநாவலே இருந் தது. அதனை சிறிய மாற்றங்களுடன் மீண்டும் எழுதி னேன்.

ஆனால்

குறுநாவல் அச்சாகிக் கொண்டிருக்கும் போது தவிர்க்க முடியாத காரணங்களால் எஸ். எஸ். குக நாதன் வெளிநாடு போக, குறுநாவலின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி அச்சான நிலையில் அச்சகத்தில் தங்கி விட்டது.

இவ்வாறான ஒரு நிலையிலும் நான் குறுநாவல் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அத்தருணத்தில் தான் ''அரை குறையாக உள்ள குறுநாவலை அப்படியே விடாமல் மிகுதிப் பக்கங்களையும் பூர்த்தி செய்து வெளியிடும்படி'' முதன் முதலில் என்னிடம் வலியுறுத் தியவர்கள் மதிப்புக்குரிய செங்கை ஆழியான் அவக ளும் ஈழநாடு வாரமலர் ஆசிரியர் எஸ்—சபாரட்ணம் (சசி பாரதி) அவர்களும் தான்.

இவர்களது ஊக்கமே இந்த நூல் புத்தகமாக வெளிவரக் காரணம் என்றால் மிகையாகாது. கூடவே வேண்டிய போது தேவையான உதவிகளையும் ஆலோ சனைகளையும் ''செங்கை ஆழியான்'' அவர்கள் வழங்கி

சிறப்பானதொரு முன்னுரையையும் வழங்கியுள்ளார்; அவருக்கும் எஸ். சபாரட்ணம் அவர்களுக்கும் எனது நன்றியை முதற்கண் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இக்குறுநாவல் வெளிவர அடிப்படைக் காரண மாக இருந்த நண்பர் எஸ். எஸ். குகநாதனுக்கும் நன்றி தெரிவிப்பது எனது கடமையே.

இந்நூலின் அட்டைப்படத்தை அழகுற அமைத்து தந்த ஓவியர் வி: கனகலிங்கம் (வி. கே) அவர்களுக்கும் அச்சு வேலைகளை சிறப்புடன் பூர்த்தி செய்து தந்த சிரித்திரன் அச்சகத்தினருக்கும், மதிப்புக்குரிய சிரித்தி ரன் ஆசிரியர் ''சுந்தர்'' அவர்கட்கும், எனக்கு பல விதங்களிலும் உதவி செய்த நண்பர்களுக்கும் எனது நன்றி.

எழுதத் தொடங்கிய நாட்களில் இருந்து என்மீது அக்கறை கொண்டு, என் வளர்ச்சியில் ஆர்வம் உள்ள வீரகேசரி வாரவெளியீட்டு ஆசிரியர் பொன். இராஜ கோபால் அவர்கட்கும், தொடர்ந்து என் ஆக்கங்களை பிரசுரித்து வரும் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ஈழநாடு பதில் ஆசிரியர் பி. எஸ். பெருமாள், ஈழமுரசு ஆசிரியர் எஸ். திருச்செல்வம், ஈழநாடு வார மலர் ஆசிரியர் எஸ் சபாரட்ணம் (சசி பாரதி) ஆகி யோருக்கும் நன்றிகள் பல.

சிறுவயதுமுதல் எனக்கு எல்லாமாக இருந்து என்னை வழிப்படுத்தி என்றும் என் உயிராக இருக் கும் மறைந்த எந்தை தம்பையா சிதம்பரநாதபிள்ளை (இணுவையூர் த. சிதம்பரநாதன்) அவர்களையும் இப் போது நினைவு கூருகின்றேன்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

கச்சேரி யாழ்ப்பாணம்;
25-5-8

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்
எழுதிய

# என்றாவது ஒருநாள்...?

அளவான சிறு வீடு, வளவைச் சுற்றி நாற்புறமும் கிடுகு வேலி. இடதுபக்க வேலி நன்றாக பிரிந்துபோயிருந்தது. வீட்டின் பின்புறம் இடதுபக்க வேலியோடு கிணறு இருந்தது. கிணற் றைச் சுற்றி பல இன வாழைகள் காணப்பட்டன.

கிணற்றுக்குச் சற்று தள்ளி அப்பால் மல்லிகை ஒன்று அடர்த் தியாக பூத்திருந்தது. மூக்கைத் துளைத்தது.

பரந்த வயலின் மத்தியிலே அந்தச் சிறு வீடு காணப்பட்டா லும், வயலின் ஏனைய பகுதிகளில் உயரமான பல மரங்கள் வளர்ந்து வளவைச் சோலையாக்கியிருந்தது.

அதுகாரணமாக அந்தப் பகுதி குளிர்மை பொருந்தியதாக காணப்பட்டது. அக்குளிர்மையினை ஞானசுந்தரம்மாஸ்டர் வெகு வாக அனுபவித்து வளவை பலதடவை சுற்றிச் சுற்றி பார்த் தார்.

,, மாஸ்டர் எப்படி இடம் பிடிச்சிருக்கோ '' என்று கந்தசாமி கேட்டான்:

" ஓமோம் நல்ல இடம், அமைதியான, சூழ்நிலை ஏகாந்தமாக பொழுதைப் போக்க அமைதியான பகுதி'' என சந்தோஷத்துடன் மாஸ்டர் சொன்னுர்.

அவருடைய முகத்தை ஆழமாக பார்த்துக்கொண்டு

'' எனக்கு உள்ளூர பயமாகத்தான் இருந்தது. இந்த வீட்டை வந்து பார்த்த கனபேர் ஏதோ காட்டுக்கை வாற ஆட்கள் மாதிரி கதைக்கிறவை, இந்த இயற்கை அழகு செறிந்த இடத்துக்கு சந்தோஷமாக வந்த ஒரு ஆள் நீங்கள்தான் '' என கந்தசாமி சொல்லும் போதே மாஸ்டர் சிரித்தார்.

'' கந்தசாமி நானும் கனக்க யோசித்தனுன். எனக்கு ஆட்களின்ரை அமளி பிடிக்காது. ஒதுக்குப்புறமாய் அமைதியாய் இருக்கவேணும். முந்திரவுணிலே படிப்பிக்கும்பொழுது நான் எங்கையாவது ஒதுக்குப்புறமாய்தான் அறை எடுக்கிறனுன். இப்படியான கிராமங்களுக்கு வரச் சம்மதிக்கிறதே. இந்த அமைதியான இடங்களுக்காகத்தான் ''

'' ஏதோ எனக்கு இப்பதான் நிம்மதி ''

'' இனி எனக்கு ஒவ்வொருநாளும் நிம்மதி '' எனச் சொல்லி ஞானசுந்தரம் மாஸ்டர் சிரித்தார்.

'' சரி மாஸ்டர் அப்ப நான் போட்டு பின்னேரமாக வாறன் நீங்கள் கொஞ்சநேரம் ஓய்வெடுங்கோ '' என கந்தசாமி சொன்னுன்.

'' ஓமோம் நீர் போட்டு வாரும் பின்னேரம் கட்டாயம் வரவேணும் என்று இல்லை உம்முடைய வசதியைப்போல செய்யும்.

'' இல்லை மாஸ்டர் எனக்கு அப்பிடியொன்றும் அவசரமாய் இல்லை அதுசரி உங்கட மத்தியான சாப்பாடு என்னமாதிரி''

'' நான் சாப்பாட்டை வரேக்க கொண்டு வந்திட்டன். வந்த முதல்நாளே உங்கடை ஊர் சாப்பாட்டை சாப்பிடேலாமல் போட்டுது என்ன? அதுக்கென்ன தொடர்ந்தது இஞ்சைதானே சாப்பிடப்போறன் ''

'' இல்லை மாஸ்டர் நான் வீட்டை சொல்லிப் போட்டுத்தான் வந்தனுன் ''



''சீச்சி இண்டைக்கு வேண்டாம் இன்னுமொரு நாளைக்கு பாப்பம் நேரம் சென்று போகுது நீர் போட்டு வாரும் வசதிப்பட்டால் பின்னேரம் வாரும் இல்லாட்டி நாளைக்கு பள்ளிக்கூடத்தில் சந்திப்போம் சரிதானே. நான் இப்ப குளிச்சிட்டு சாப்பிடப் போறன் கொஞ்சநேரம் நித்திரையும் கொள்ளவேணும்''

"அதுதான் நல்லது நல்லாய் களைச்சுப் போபிருப்பியள் நான் போட்டு வாறன்'' என்று சொன்ன கந்தசாமி மாஸ்டரிடம் விடைபெற்று போனுன்.

கந்தசாமியை வழி அனுப்பிவைத்துவிட்டு வேலிப்படலையை உட்பக்கமாக பூட்டிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தார் மாஸ்டர்.

வீடு அவருக்கு நன்ருகப் பிடித்திருந்தது. இரண்டு அறைகள் குசினி, சின்ன விருந்தை சகிதம் அடக்கமாக இருந்தது. தனியாளான அவருக்கு அது பெரிதுதான் ஆனுல் வேறு யாருடனுவது பங்கு போட்டால் தன்னுடைய அமைதி கெட்டுவிடும் என்பதற்காக அதனை தவிர்த்துக்கொண்டார்.

தான் கொண்டுவந்த பொருட்களை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டு உடைகளை மாற்றினுர். "நாளைக்கு தொடக்கம் சமைக்கவேணும் அதுவும் விடியற்காலமை நேரத்தோடே எழும்பி சமைச்சால்தான் நேரத்திற்கு பள்ளிக்கூடம் போகலாம் பின்னேரம் கடைத்தெருவுக்கு போய் சமையலுக்கு தேவையான சாமான்கள் வாங்கினுல் நல்லது கந்தசாமி வந்தால் உதவியாகத்தான் இருக்கும்'' என்று தனக்குள் யோசித்துக்கொண்டு கிணற்றடிக்கு வந்தார்.

மல்லிகை வாசனை-- குப்பென்று மூக்கை துளைத்தது. அந்த பரவசத்தில் மாஸ்டர் கொஞ்ச நேரம் தன்னை மறந்து போனுர்

நாளும் பொழுதும்--இந்த கிணற்றடியிலேயே சீவிக்கலாம் போல-- எவ்வளவு-- நல்ல இடம் எனவும் நினைத்துக் கொண்டார்.

இடையில் துவாயைக் கட்டிக்கொண்டு துலாவினுல் தண்ணீரை அள்ளி உடலில் வார்க்க தொடங்கியபோது உடலில் புத்துணர்ச்சி பரவியது.

தொடர்ந்து தண்ணீரை உடலில் வார்க்க, வார்க்க காரணமில்லாமல்-- மகிழ்ச்சி உண்டானது. உடம்பை மாத்திரம் அல்ல-- மனத்தையும் ஆனந்தத்தில்-- ஆழ்த்தும்-- தன்மை

LIBRARY

இந்த தண்ணீருக்கு இருக்கின்றதா? எனவும் மாஸ்டர் யோசித்தார்.

இவ்வாறு எல்லாம் வசதியாக அமைவது கஷ்டம். ஏதோ நல்ல காலம் எனக்கு இவ்வாறான இடம் கிடைத்தது. கந்த சாமிக்கு தான் நன்றி சொல்ல வேணும்-- என அவருடைய நினைவுகள் விரிந்து கொண்டு போயின.

"நேரமிருந்தால் பின்நேரம் ஊரை சுற்றி பார்க்க வேணும் வயல் வெளிப் பக்கமும் போகலாம் பஸ்ஸில வரேக்க பார்த்த குளத்தடிக்கும் போகலாம்."

குளிப்பதால் ஏற்பட்ட புத்துணர்ச்சியுடன் இவ்வாறான நினைவுகளும்-- அவருக்கு சுகத்தினைக் கொடுத்தன. அந்த சுகத்தில் அவர் மெய்மறந்து போனார்.

ஞானசுந்தர மாஸ்டருக்கு வயது நாற்பது இருக்கும். ஆனால் வயதை அந்தளவுக்கு மதிக்க மாட்டார்கள் அவ்வளவு இளமையாக காணப்பட்டார்.

முகத்தில் இளமைக்களை இருந்தது. விழிகளில் அதீதமான பளபளப்பும் யாரையும் சட்டென்று கவர்ந்து விடும் ஈர்ப்பு சக்தியும் போட்டி போட்டன.

தலைகூட அடர்த்தியான சுருளான மயிரால் கவர்ச்சியுடன் அவரது முக வசீகரத்தை மெருகூட்டியது. மொத்தத்தில் மாஸ்டர் பார்வைக்கு சந்தோஷமான ஆள்.

அவர் அதிர்ந்து பேசமாட்டார் மென்மையாக பேசுவது இயல்பான ஒரு விசயம். யாரையும் எளிதில் தன் வசம் இழுக்க செய்துவிடும் ஈர்ப்பு. அந்த இயல்பான பேச்சில் இழையோடும்

இருபத்தைந்து வயதில் கலியாணம் நடந்த போதும் இவ் விதமாகத் தான் இருந்தார். பத்துவருட இல்வாழ்க்கையின் பின்னர்-- மனைவியை பறிகொடுத்த பின்னரும் அவரின் தனித்துவங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

மனைவியை இழந்த ஆரம்பகால கட்ட அந்த வேதனைகள் நாளா வட்டத்தில் அவருக்கு ஏதோ ஒரு மன வைராக்கியத்தை கொடுத்திருக்கவேண்டும்.

கடந்த ஐந்து வருடங்களாக அவரை மறுமணம் செய்யும் படி நண்பர்களும் உறவினர்களும் எவ்வளவோ வற்புறுத்தியும் பயன் இல்லை.



CHUNNAKAM
LIBRARY

அவர்களின் வேண்டுகோளுக்கு மாஸ்டர் பதில் சொல்ல மாட்டார். மௌனமாக சிரித்துக்கொண்டு இருப்பார்.

நண்பர்களும் உறவினர்களும் மாத்திரம் அல்ல அவரோடு கூடப் படிப்பித்த மிஸிஸ் சாந்தலிங்கம் என்ற கோமதி டீச்சரும் தான் தெண்டித்தார் மாஸ்டரை மறுமணம் செய்யும்படி.

ஆனால் இதுவரை மாஸ்டர் மறுபடி சம்சாரியாகவில்லை.

தனியாக வாழப் பழகி தானே சமைத்து தன் அலுவல்களை தானாகவே செயல்பட்டு வாழப்பழகி அதில் அமிர்தமான அனுபவமும் பெற்றுவிட்டார்.

ஊர் ஊராக மாற்றம் கிடைக்கும்போது எதுவிதமான மறுப்பும் இல்லாமல் போவது ஞானசுந்தர மாஸ்டர்தான்.

இயற்கையோடு இரண்டறக் கலந்து குளித்துக்கொண்டிருந்த மாஸ்டர்

"எடியேய் தேவடியாள்" என்று எழுந்த சத்தத்தைக்கேட்டு திடுக்குற்றுப் போனார்.

அவர் காதை பிளந்த அந்த சத்தம் இயற்கையுடன் சல்லாபித்துக் கொண்டிருந்த அவரின் மனோநிலையையும் பாதிப்படையச் செய்து விட்டது.

சில வினாடிகள் செயலிழந்து போன அவர் தன்னை சுதாகரித்து சத்தம் வந்த திசையை நோக்கினார். வளவின் இடது புரத்து பிரிந்து போயிருந்த வேலியின் ஊடாக அவர் பார்வை சென்றது.

முதல் தடவையாக அந்த வேலிக்கு அப்பால் தெரிந்த ஒரு வீட்டின் புறத்தைப் பார்த்தார். வீட்டின் பின்புறம் அதாவது விறாந்தை ஒரு மேடையாக கண்களில் தென்பட அந்த மேடையிலே ஒரு பெண் நின்றிருந்தாள்.

அவள் அழகாக இல்லாவிட்டாலும் தன்னை அழகாக்க கஷ்டப்பட்டிருந்தாள். தினமும் பலமணி நேரம் அந்த கஷ்டத்திற்காக செலவளிப்பவள் போலவும் காணப்பட்டாள்.

முகத்தில் இருபுறமும் கட்டையாக வெட்டி விடப்பட்ட மயிர்கள் சதிராட கன்னங்கள் கஸ்தூரிமஞ்சளில் பளபளத்தன இயற்கையான கண் புருவங்கள் மறைந்துபோய் இருக்க செயற்கைப் புருவங்கள் வானவில்லாகி உயர்ந்து வளைந்து

இயற்கை அழகில் நாட்டம் கொண்ட மாஸ்டர் விரைவாக பார்வையை கீழே இறக்கினார் ஆனால் அவள் சத்தம் போட்ட காரணத்தை அறிய விரும்பி மீண்டும் அவளை பார்வையால் எடைபோட்டபோது

அவள் ஒரு வகையான ஆவேசம் பிடித்தவள்போலவிறைத்த பார்வையுடன் தரையைப் பார்த்துக்கொண்டிருப்பதாக உணர்ந்த மாஸ்டர் அவளின் முன்புறத்தே தரையைப் பார்த்தபோது தரையில் வேறு ஒரு பெண் அமர்ந்திருந்தாள். தரையில் காணப்பட்ட பெண்ணின் முகத்தினை மாஸ்டரால் பார்க்க முடியாவிடினும்-- வாரப்படாத தலைமயிரும் வெளிறிப் போன சட்டையும் நைந்து போன சேலையும் அவர் கண்களில் தெரிந்தன.

"எடியேய் என்னடி செய்கிறாய்" என விருந்தையில் நின்ற நாகரீக இளம் பெண் மீண்டும் சத்தம் போட்டாள்.

தரையில் அமர்ந்திருந்த பெண் அதற்கு பதில் சொல்லவில்லை

"என்னடி நான் கேட்கிறன் பேசாமல் இருக்கிறாய் சொல்லடி" என்று மேலும் கோபத்துடன் அவள் கத்த

தரையில் அமர்ந்திருந்த பெண் தொடர்ந்தும் மௌனம் சாதித்ததோடு மட்டும் அல்லாது இதுவரை நேரமும் உயர்ந்திருந்த தன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

இந்த செய்கை விருந்தையில் நின்று கொண்டிருந்த பெண்ணின் கோபத்தை பன் மடங்காக்கி இருக்க வேண்டும்.

பல்லைக் கடித்துக் கொண்டு விரைவாக விருந்தையை விட்டு இறங்கி

"என்னடி நான் கேட்கக் கேட்க பேசாமல் இருக்கிறாய் உனக்கு என்ன அவ்வளவு வாய்க் கொழுப்போ இல்லை திமிர் கூடிப்போச்சோ என்ன மூதேவி கழுதை என்னடி ஏன் பேசாம இருக்கிறாய் வாயைத் திறவன்"

இதற்கும் பதில் இல்லாமல் போகவே

"ஏன்டி உனக்கு காது இல்லையே நான் கத்துறது கேட்கேல்லையே நீ- சரியான தேவடியாள் தான்"என்று சொல்லிக் கொண்டு தரையில் இருந்த பெண்ணுக்கு கண்டபடி அடிக்க தொடங்கினாள் நாகரீகமான பெண்.

மாஸ்டர் திகைத்துப் போய் தான் குளிப்பதையும் மறந்து அந்தக் காட்சியைப் பார்த்தார்.



கண்டபடி அடித்துவிட்டு அந்த நாகரீகப் பெண்மணி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க இடத்தை விட்டு நகர்ந்தார்.

அடிவாங்கிய பெண் எந்த விதமான மாறுதலும் இல்லாமல் தரையிலேயே அமர்ந்திருந்தாள். ஆனால் அவள் விம்மிக் கொண்டு அழும் ஓசை மாத்திரம் மெல்லியதாகக் கேட்டது.

மென்மையான சுபாவம் கொண்ட மாஸ்டருக்கு அந்த நிகழ்ச்சி கடுமையான அதிர்ச்சியைக் கொடுத்தது. அது காரணமாக இனிமையான தொரு சுகத்துடன் குளித்துக் கொண்டிருந்த அவர் அந்த சுகத்தினை மேலும் அநுபவிக்க முடியாமல் குளிப்பை இடை நிறுத்திக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டார் வீட்டுக்குள் வந்தபோதும் மனம் அமைதியடைய மறுத்தது. சற்றுமுன்னர்வரை எவ்வளவு ஆனந்தமாகி இருந்த மனம் இப்போது

வெடித்து பரவும் இலவம் பஞ்சாகி நறிகெட்டு பறக்க ஆரம்பித்துவிட்டது. அந்தப் பெண் எதற்காக இந்தப் பெண்ணுக்கு அடித்தாள்.

இவள் ஏன் மௌனமாக அவளது சித்திரவதைகளை பொருத்துக்கொண்டாள். யோசிக்க யோசிக்க குழப்பந்தான் மிஞ்சியது.

பிழையான இடத்தில் குடியிருக்க வந்துவிட்டோமா? இப்படியான சூழ்நிலையைப் பற்றி கந்தசாமி ஏன் சொல்லவில்லை மறந்துபோய்விட்டானா? அல்லது காரணத்தோடுதான் சொல்லவில்லையா?

எதையும் தீர்மாணமாக எடுக்கமுடியவில்லை எல்லையில்லாத மனஞ் சங்கடத்தை அடைந்த மாஸ்டர் வெகுநேரம்வரை கஸ்டப்பட்டார்.

பலமணிநேரம் கழிந்து மாஸ்டர் வெளியேவந்து கிணற்றடியில் நின்று பார்த்தபோது பக்கத்து வீட்டின் பின்புற விருந்தையின் பின்னால் அடிவாங்கிய அந்த பெண் தொடர்ந்து அழுதுகொண்டிருப்பது தெரிந்தது.

மாஸ்டர் முதல்தடவையாக ஊர் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது புது அனுபவமாக இருந்தது. இப்படியான பல ஊர்ப் பள்ளிக்கூடங்களில் அவர் ஏற்கனவே படிப்பித்தாலும் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருவது புதியதோர் உணர்ச்சியைக் கொடுத்தது.

எதனுல் என்பதை மாஸ்டரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை அடிமனதில் நேற்றைய பக்கத்துவீட்டு சம்பவம் நெருஞ்சி முள்ளாகி உறுத்தியது.

"வாருங்கோ மாஸ்டர் எப்படி பள்ளிக்கூடம்" என வரவேற்ருன் கந்தசாமி.

மெல்லியதாக சிரித்துக்கொண்டு "பார்க்க நல்லாய் நான் இருக்கு" என்ருர் மாஸ்டர்.

"நேற்றுப் பின்னேரம் நான் சொன்னபடி உங்களிட்டை வரேலாமல் போட்டுது மாஸ்டர். வேறை ஒரு அவசர அலுவலாய் ரவுணுக்கு போகவேண்டி வந்திட்டுது."

"அதுக்கென்ன பரவாயில்லை"

"குறை நினையாதேங்கோ"

"சா நான் ஏன் குறை நினைக்கப் போறன்"

"எப்படி இரவு நித்திரை புது இடம், புது வீடு என்றபடியால் வழக்கம் போல இருந்துதோ அல்லது ஏதாவது பிரச்சினையள்" "இல்லைத் தம்பி" என்று கூறும்போதே மாஸ்டரின் குரலில் உடைவு ஏறுபட்டது.

சட்டென்று நினைவுதிரையில் நேற்றைய சம்பவம் சித்திரமானது. சற்று நேரம் அந்த சித்திரத்தில் மனம் ஆழ்ந்துபோனது

"என்ன மாஸ்டர் யோசினை" என கந்தசாமி கேட்டபிறகு தான் அவர் சுயநினைவுக்கு வந்தார்.

பக்கத்துவீட்டுப் பிரச்சினைபற்றி கந்தசாமியிடம் கேட்போமா? என நினைத்தாலும் கேட்கவில்லை.

தான் வந்த முதல் நாளிலேயே பக்கத்து வீடு பற்றி அதுவும் இரண்டு பெண்களைப்பற்றி விசாரித்தால் கந்தசாமி என்ன நினைப்பான் என்ற நினைப்பே அதற்கு காரணம்.

கந்தசாமியை அவருக்கு நேரடியாகத் தெரியாது. வேருெரு நண்பர் மூலமாகத் தான் அறிமுகமானுன். நேற்று இந்த ஊருக்கு வந்த பின்னர் சந்திப்பு படலம் கூட நடந்தது.

அப்படியிருக்கையில் பக்கத்து வீட்டுப் பெண்களைப் பற்றி விசாரிப்பது. நாகரீகம் இல்லாத செயல் என தனக்குள் முடிவு செய்து தன் மனத்தை தேற்றிக் கோண்டார்.

இவ்வளவு காலமும் பெண்கள் விடயத்தில் அவர் அக்கறை காட்டியதில்லை. காரண மில்லாமல் பெண்களுடன் கதைப்பது



கூடஇல்லை. தன்னேடு பணிபுரியும் சக ஆசிரியர்களுடன் அளவோடு தான் பேசுவார்.

கொஞ்சக் காலத்திற்கு முன்னர் படிப்பித்த பள்ளிக் கூடத்தில் அவரோடு பணி புரிந்த கோமதி ரீச்சர் என்னும் மிஸிஸ் சாந்தலிங்கத்துடன் தான் அவர் கொஞ்சம் அதிகம் கதைத்திருப்பார்.

நாளா வட்டத்தில் அது கூட தேய்ந்த நிலவாக மாறிப் பின்னர் அமாவாசை இருளாக போய் விட்டது. கோமதி ரீச்சரைப் பற்றி நினைக்கும் போது உடம்பு லேசாக நடுங்கும் மனம் பட படப்பில் சங்கமமாகி விடும்.

பொதுவாக அவர் மிகுந்த கட்டுப்பாடு உடையவர். தானே வலிய கட்டுப் பாட்டினை ஏற்படுத்திக் கொள்ள வில்லை. இயல்பாக ஏற்பட்டுவிட்ட ஒரு நடைமுறையாகி விட்டது.

இது காரணமாக அவர் படிப்பித்த பள்ளிக்கூடங்களில் அவருக்கு அதிக மரியாதை இருந்தது. தற்கால சூழ் நிலையில் ஆசிரியர் ஒருவருக்கு இவ்விதமான மரியாதை இருப்பது அபூர்வம் என்று மாஸ்டரின் நண்பர்கள் சொல்லுவார்கள்

மாஸ்டரின் இந்த தன்மைகளைப் பற்றி கந்தசாமியை மாஸ்டருக்கு அறிமுகப் படுத்திய நண்பர் கந்தசாமிக்கு சொல்லியிருக்க வேண்டும்.

அதனுல் தான் "மாஸ்டர் உங்கடை தனித்தன்மைகளைப் பற்றி நான் நல்லாய் கேள்விப் பட்டிருக்கிறன். உங்களைப் போல ஒழுங்காக இருக்கிற ஆட்களைக் காணுறது வெகு அபூர்வம் உங்கடை அறிமுகத்தை என்னைப் பொறுத்த வரை பெருமை படக் கூடிய ஒரு செயலாக நினைக்கிறன் என்று கந்தசாமி நேற்று அவரைக் கண்ட போது தெரிவித்திருந்தான்-

தன்னைப்பற்றி ஓர் உயர்ந்த எண்ணத்தை வைத்திருக்கும் ஒருவனிடம் தன் உண்மை நிலையை புரிந்து கொள்ளாமல் பெண்களைப் பற்றி தான் விசாரிக்க தவருக நினைத்து விட்டால்.

வேண்டாம் பிரச்சினை

"என்ன மௌனமாகிவிட்டீர்கள்"

"ஒன்றும் இல்லை தம்பி" என்று கூறும்போதே பள்ளிக்கூட ஆரம்ப மணி அடித்தது.

கந்தசாமியிடம் விடைப்பெற்று பள்ளிக்கூட கருமங்களில் மூழ்கிவிட்டாலும் மின்னி மறையும் ஒளிக்கு தோன்றி மறையும் நிழல்கள்போல பக்கத்துவீட்டு பெண்களின் நினைப்பு இடையிடையே அரும்பின.

பள்ளிக்கூட மாணவர்களின் புதுமையான பார்வைகள் சக ஆசிரியர்களில் மரியாதை உரையாடல்கள் எல்லாமே மனதை தொடவில்லை.

அவை மனத்தை தொடவிடாமல் பக்கத்துவீட்டுப் பெண்களே நின்றுர்கள் மாஸ்டருக்கு தன் மனம்மீது கோபம் உண்டானது.

தேவையில்லாமல் ஏன் பக்கத்துவீட்டு நிகழ்ச்சியைப்பற்றியே யோசிக்கின்றது. புதிய ஊருக்கு வந்து ஊரைபற்றி பூரணமாக அறிந்துகொள்ளமுன்னர் இது என்ன உபத்திரவம்.

மத்தியாணம் இரண்டுமணிக்கு பள்ளிக்கூடம் விட்டபொழுது மாஸ்டரும் கந்தசாமியும் கதைத்துக்கொண்டு நடந்தார்கள்.

ஊரின் புழுதி படர்ந்த பாதைகள் வழிகளின் பசுமையை பார்க்கும்போதும் மாஸ்டர் அவற்றில் லயித்துவிடாமல் சிந்தனை வயப்பட்டார்.

“என்ன மாஸ்டர் அப்போதை தொடக்கம் பார்க்கிறன் அடிக்கடி யோசிக்கிறியள்”

“அப்படி ஒன்றும் இல்லைத்தம்பி என்னுடைய பழக்கமே இது தான்” என பதில் சொன்னாலும் “கந்தசாமியிடம் கேட்டுப் பார்ப்போமா?” என மனம் பழையபடி முருங்கைமரத்தில் ஏறும் வேதாளமானது.

இருவரும் அப்போது ஊரின் சிறிய கடைத்தெருவுக்கு வந்தார்கள்.

“வாருங்கோ தேத்தண்ணி குடிச்சிட்டுப் போவம்” என அவரை எதிரே இருந்த சிறிய கடைக்கு கந்தசாமி அழைத்தான்.

“இல்லைத்தம்பி இப்ப போய் சாப்பிடுறதுதானே. பரவாயில்லை வேண்டாம் என மாஸ்டர் இழுத்தார்.”

“இல்லை மாஸ்டர் வாங்கோ இன்னும் கொஞ்சத்தூரம் நடக்கத்தானே வேணும் நன்னாரி வேர் போட்ட தேத்தண்ணி நல்லாயிருக்கும். எங்கடை ஊரிலை இது விசேசமான கடை” என்று



சொல்லிக்கொண்டு கந்தசாமி நடக்க வேறு வழியில்லாமல் மாஸ்டரும் பின்தொடர்ந்தார்.

கிடுகால் கூரை வேய்ந்த அந்த சிறிய கடையின் உற்புறத்தில் அழுக்குபடையாகி படர்ந்திருந்த வாங்கில் இருவரும் அமர்ந்தார்கள்.

“எல்லா இடமும் இப்படித்தான்” என வாங்கினைச் சுட்டிக்காட்டி கந்தசாமி சொல்ல

“இதெல்லாம் எனக்கு பழக்கம் என்ரை சீவியத்தில் பெரும் பகுதி இப்படியான இடத்தில்தான்”

கந்தசாமி தேநீருக்கு ஓடர் கொடுத்துவிட்டு சிகரெட் பக்கெற்றை மாஸ்டரிடம் நீட்டினுன்

“நான் பாவிக்கிறேல்லை தம்பி” என்று சிரித்துக்கொண்டு சொல்ல கந்தசாமி சிகரெட் பக்கெற்றை மீண்டும் பொக்கட்டில் வைத்தான்.

“நீர் புகைக்கிறதெண்டால் புகையும்”

“பரவாயில்லை மாஸ்டர் புகைக்காத உங்களுக்கு முன்னால் நான் புகைக்கிறது சரியில்லை”

இவ்வளவு மரியாதை உள்ளவனிடம் தான் பக்கத்து வீட்டுப் பெண்கள் பற்றி விசாரிக்ககூடாது வீணாக ஏன் கந்தசாமிக்கு சங்கடத்தைக் கொடுப்பான்.

தேநீர் வந்தது

இருவரும் குடிக்க அரம்பித்தார்கள் தேநீர் கடைக்காரர் மாஸ்டரைப் பார்த்து மரியாதையுடன் சிரித்தார்.

“நீங்கள்தான் புதுக்கவந்த மாஸ்டரே” என கடைக்காரர் கேட்கும்போதே முகத்தில் மாஸ்டருடன் அறிமுகமாகும் ஆர்வம் இருந்தது.

“ஓமோம்” என தலையை நிமிர்த்தி மாஸ்டர் சிரித்தார்

“சாப்பாடு என்னமாதிரி நான் இஞ்சை ஓடருக்கு மத்தியான சாப்பாடு எல்லாம் குடுக்கிறனுன். அனேகமாக கவர்மெண்ட் ஆட்கள் எல்லாம் இஞ்சைதான் சாப்பிடுறவை”

“நான் சமைச்சுத்தான் சாப்பிடுறனுன்”

“அப்படியோ” என்ற பதில் சப்பென்று வெளிப்பட்டது.

“அப்ப மாஸ்டர் எங்கை இருக்கிறியள்” எனக் கடைக்காரர் தொடர்ந்து கேட்டார்.

மாஸ்டருக்கு பதில்சொல்லத் தெரியவில்லை. தான் இருக்கும் வீட்டின் அடையாளத்தை எப்படி சொல்லுவது என தடுமாறி கந்தசாமியைப் பார்க்க

"எங்கடை பொன்னம்பலத்தாரின் பழைய வீட்டில்தான் இருக்கிறார். கேணியடி ஒழுங்கையில்" என்று கந்தசாமி பதில் சொன்னார்.

"என்ன பொன்னம்பலத்தாரின் பழம் வீடோ?"

"ஓமோம்"

"ஏன் தம்பி கந்தசாமி வேறை வீடு இல்லையே. மாஸ்டரைப் பார்த்தால் சோலி இல்லாத ஆள்மாதிரி இருக்கு ஏன் அந்த இடத்தில் வீடு எடுத்து குடுத்தனீர்?" என கடைக்காரர் கலவரத்துடன் கேட்க

"மாஸ்டர் பிரச்சனை இல்லாத ஆள் வலிய பிரச்சனை வந்தாலும் விலத்திக் கொண்டு போயிடுவார்- அதால தான் அந்த வீட்டை எடுத்துக் குடுத்தனான்." என்று கந்தசாமி சொல்லிவிட்டு

"மாஸ்டர் கனக்க யோசியாதேங்கோ உங்கள் பக்கத்து வீட்டில சின்ன பிரச்சனை ஒன்று இருக்கு. போகேக்க சொல்லுறன் நேற்று சொல்ல மறந்துபோனன்" என்று மாஸ்டரிடம் சொன்னான்

கந்தசாமியிடம் தான் கேட்க கஸ்டப்பட்டுக்கொண்டிருந்த விடயம் இவ்வாறு தான் கேட்காமலே வெளிவரப் போவதை உணர்ந்த மாஸ்டரின் மனக் குழப்பங்கள் சற்று நீங்கினாலும்

"பக்கத்து வீட்டில் சின்னப் பிரச்சனை"என்ற கந்தசாமியின் வார்த்தைகளும் கடைக்காரரின் முகத்தில் ஏற்பட்ட மாற்றமும் கொஞ்சம் பதட்டத்தைக் கொடுக்க தீவிரமான யோசனையுடன் கந்தசாமியை பார்க்க வேண்டியதாயிற்று.

"மாஸ்டர் பெரிய கரைச்சல் ஒன்றும் இல்லை உங்கடை பக்கத்து வீட்டில ஒரு பெண்ணை இன்னொரு பெண் கண்டபடி பேசிக் கொண்டிருப்பாள் அல்லது அடித்துக் கொண்டு இருப்பாள் அவ்வளவு தான் அவையளால உங்களுக்கு சிக்கல் இல்லை நீங்களும் அதை பெரிசாய் எடுக்காட்டி ஒன்றுமில்லை."

கடையை விட்டு தெருவுக்கு வந்து மீண்டும் நடக்க தொடங்கியபோது க ந் த சா மி சாதாரணமாக சொல்லிக்கொண்டு போனான்.



மாஸ்டருக்கு கந்தசாமியிடம் இனம்புரியாத சலிப்பு ஏற்பட்டது. என்ன மனிசன் இவன் ஒரு நாள் காட்சியை கண்ட பிறகே நான் நிம்மதியில்லாமல் மனம் குழம்பி கஷ்டப்படுகிறன். இவன் எப்படி வெகு சாதாரணமாக சொல்லுகின்றான்.

மனம் குழம்பியதால் வார்த்தைப் பஞ்சம் ஏற்பட்டோ என்னவோ மாஸ்டர் கதைக்க கஸ்டப்பட்டார். "உங்கடை பக்கத்து வீட்டில இரண்டு பொம்பிளையள் இருக்கினம் மாஸ்டர். ஒருத்தி படு நாகரீகம் அவள்தான் சகுந்தலா மற்றவள் வசந்தா பரட்டைத் தலையும் நைந்து போன ஆடைகளுமாக இருப்பாள்"என கந்தசாமி சொல்லிக்கொண்டு மாஸ்டரைப் பார்த்தான்.

மாஸ்டரின் முன்னால் நேற்றைய காட்சியிலிருந்து கந்தசாமி சொன்னவைகளை வைத்துக்கொண்டு யார் சகுந்தலா? யார் வசந்தா? என்பதை முடிவு செய்தார்.

"சகுந்தலாதான் தமக்கை, வசந்தா தங்கச்சியார் சகுந்தலாவின் புருஷன் வெளி நாட்டில ஓமானிலபோல" "ம்..."என்றார் மாஸ்டர்.

"சகுந்தலாதான் வசந்தாவுக்கு அடிப்பாள். அடியென்றால் கண்டபடி விழும் பேசினால் அந்தப் பேச்சைக் கேட்கேலாது."

கந்தசாமி அர்த்த மில்லாமல் கதைப்பதுபோல இருந்தது மாஸ்டருக்கு. அவன் சொல்லும் விடயங்கள் சரிதான். ஆனால் எதற்காக இப்படி நடக்கின்றன? என்ன காரணம் என்பதை சொல்லாமல்.

அக்கா தங்கை சண்டைகள் இயல்பானவைதான். ஆனால் இவ்வாறு மோசமாக

"சகுந்தலா சரியான பொல்லாத ஆள் தன்னைவிட அழகான பொம்பிளையள் இல்லை என்ற மாதிரியான மனோபாவம் புருஷன் வெளியில இருந்து உழைத்து அனுப்புறதால எல்லா வசதிகளும் இருக்கு"

இருவரும் வெகுதூரம் நடந்து வந்துவிட்டார்கள். மாஸ்டருக்கு ஆத்திரமாக இருந்தது. காரணத்தை சொல்லாமல்

"பிரச்சனை என்றால்தம்பி எனக்கு வேறைவீடு பார்ப்பம்" என்றார்.

"நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதேங்கோ உங்களுக்கு ஒரு சிக்கலும் வராது அப்பிடி வந்தால் நாங்கள் விடுவமே" என கந்தசாமி சொல்லிக்கொண்டு இருக்கும்போது

கந்தசாமி பிரிந்து போக வேண்டிய ஒழுங்கை வந்து விட்டது.

"மாஸ்டர் நான் வீட்டை போய் சாப்பிட்டிட்டு வசதிப் பட்டால் பிறகு வாறன்."

"ஓமோம் அதுக்கென்ன" என்று மாஸ்டர் சொன்னாலும் அதில் உற்சாகம் இல்லை.

விறுவிறுப்பான தொடர்கதை திடீர் என முடிந்தது போல "மிச்சக் கதையை பிறகு சொல்லுவீரோ"

"சொல்லுறதுக்கு விஷேசமாய் ஒன்றுமில்லை. எதற்கும் பிறகு வரப் பார்கிறன்." என்று சொன்ன கந்தசாமி மாஸ்டரிடம் விடை பெற்றுப் போனான்.

மாஸ்டரும் சிந்தனை வயப்பட்டவராக வீடு வந்து சேர்ந்தார். உடைகளை மாற்றிக்கொண்டு முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கி நடக்கும்போது அவரை அறியாமல் அவர் பார்வை பிரிந்து போயிருந்த வேலியின் ஊடாக பக்கத்து வீட்டுக்கு சென்றது.

அந்த வீட்டின் பின் விறுந்தையில் சுவரோடு சாய்ந்தவாறு வசந்தா அமர்ந்திருந்தாள்' தலையைத் தாழ்த்தியவாறு அவள் அமர்ந்திருந்தபடியால் இப்போதும் அவளின் முகத்தினை மாஸ்டரால் பார்க்க முடியவில்லை.

ஆனால் கலைந்த தலையும், நைந்து வெளிறிய ஆடைகளும் மாஸ்டருக்கு தெரிந்தன. அவரை அறியாமலே அவருள் ஏதோ ஒரு பரபரப்பு உண்டானது.

தலையை அவள் நிமிர்த்த மாட்டாளா? என யோசிக்கும் போதே வசந்தா இருந்த விறுந்தையின் கதவோரம் அவளின் தமக்கை சகுந்தலா தோன்றினாள்.

மாஸ்டர் கிணற்றடிக்கு போய் துலாவினால் தண்ணீர் அள்ள ஆரம்பித்தார்.

"என்னடி யோசிக்கிறாய் யோசிக்க இனி என்ன இருக்கு பெரிய அடக்க ஒடுக்கமான பொம்பிளைமாதிரி ஏன்டி உப்பிடி நடிக்கிறாய்."

என சகுந்தலா சத்தம் போட்டாள்.

ஆனால் வசந்தா அதற்கு பதில் கூறவும் இல்லை. தலையை நிமிர்த்திப் பார்க்கவும் இல்லை. மௌனமாகவே இருந்தாள்.



மௌனமாக இருப்பதை விட பயங்கரமான எதிர் தாக்கம் எதுவும் இல்லை. அதனால்தான் சகுந்தலாவின் கோபம் எல்லையற்றதாக மாறியிருந்தது.

"எடியேய் ஏன் பேசாமல் இருக்கிறாய்." என்று சொல்லிக் கொண்டு தன்கையால் அவள் தலையை இடித்தாள்

வசந்தா தலையை நிமிர்த்தி தமக்கையைப் பார்த்தாள். முகத்தில் அற்றாமை, எதிர்பேச்சு பேசமுடியாத இயலாமை விழிகளில் கண்ணீர் துளிகள் அவை அரும்பான வேகத்திலேயே மலர்ந்து சிதறின.

"போடி போ மாய்மாலம் காட்டாதே வேலியில காயப் போட்ட உடுப்புகளை எடுத்துக்கொண்டு வா தோய்ச்சுப் போட்டால் மாத்திரம் காணுமே காயப்போட்டதை நேரத்துக்கு எடுத்துவைக்க தெரியாதே" என சகுந்தலா பேசிக்கொண்டு இருக்கும்போதே வசந்தா எழுந்து வேலியை நோக்கி நடந்து வந்தாள்.

கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த மாஸ்டர் ஆர்வத்துடன் வசந்தாவை பார்த்தார்.

அவள் வெகு அமைதியாக வேலியை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கையில் மாஸ்டரின் விழிகள் அன்பான ஆதரவுடன் வசந்தாவை நோக்கின

வசந்தா வாட்டமாக இருந்தாள் நல்ல சிவந்த நிறமுடைய உடலில் அந்தச் சிவப்பின் கவர்ச்சி தெரியாதபடி சோகம் கவ்வி இருந்தது. இளமையாக அவள் காணப்பட்டாலும் அந்த இளமை பூரித்து இருக்கவில்லை: விழியோரங்களில் கண்ணீர்த் துளிகள் வரம்பு கட்டியிருந்தபோதும் ஏதோ ஒருவகை மாயக் கவர்ச்சி அந்த விழிகளில் இழையோடி இருந்தது.

தலையையும் ஒழுங்காக வாரி நெற்றியிலே பொட்டும்வைத்து அவள் முக மலர்ச்சியுடன் காணப்பட்டால் எப்படியிருக்கும் என அப்போது திடீரென யோசித்தார். "சீ என்ன யோசனைகள்" என்று தன்னை எச்சரித்து சோக மயமாக காணப்பட்ட வசந்தாவை அது காரணமாக எழுந்த அநுதாபத்தினால் அதிக அக்கறையோடு பார்த்தார்.

வேலியில் இருந்த உடுப்புகளை எடுக்கும்போது வசந்தாவும் மாஸ்டரைப் பார்த்தாள்.

ஆனால் எந்த விதமான மாறுபாடும் இல்லாமல் தன்னுடைய வேலைகளைத் தொடர்ந்தாள்.

முகத்தைக் கழுவிக்கொண்டு மாஸ்டர் வீட்டுக்குள் போவதற்காக கிணற்றடியை விட்டு புறப்பட்ட போது--

வேலியில் போட்டிருந்த சட்டை ஒன்று மாஸ்டரின் வளவுக்குள் வீழ்ந்திருந்தது. வேலியின் ஊடாக கையை செலுத்தி அதனை எடுக்க வசந்தா கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தாள்.

மாஸ்டரின் மனிதாபிமான உணர்வு செயல் படவே அதனை எடுத்து வசந்தாவிடம் கொடுத்தார். அது காரணமாக அவளை மிக அருகில் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

முன்பு அவர் பார்த்த அதீதமான கவர்ச்சியை விட மிக மேலான கவர்ச்சி அவள் வதனத்தில் இருப்பது போல மாஸ்டருக்கு இருந்தது.

சட்டையை வாங்கிக் கொண்ட வசந்தா நன்றி உணர்வுடன் சிரிக்காவிட்டாலும் சற்று மலர்ச்சியான தன்மை தோன்றி மறைந்தது.

சாப்பிட்டு விட்டுப் படுத்தாலும் மாஸ்டருக்கு நித்திரை வரவில்லை வாடிய முகத்துடன் காணப்பட்ட பக்கத்து வீட்டுப் பெண்ணான வசந்தாவின் தோற்றம் தான். அவர் நினைவில் வந்தது.

அவளது விளிகளின் மாயக் கவர்ச்சி அவருக்கு மனத்தை நெருடியது. அந்த நெருடல் காரணமாக வெகுநேரம் சோகரசம் ததும்பும் வசந்தாவின் வதனம் நினைவில் நின்றது.

கந்தசாமி பூரணமாக விடயத்தை சொல்லாததால் ஏற்கனவே குழம்பிப் போயிருந்த அவருக்கு தெளிவும் ஏற்படவில்லை.

வசந்தாவை சகுந்தலா அடிக்கிறாள் பேசுகிறாள் ஏன் என்ன காரணம்? பெரிதாக ஒன்றும் இல்லை என்று கந்தசாமி சொன்னாலும் சொந்த தமக்கை தங்கச்சியாரை இவ்வளவு மோசமாக பேச தாக்க?

யாரைப்போய் கேட்பது? நேற்று வந்து இன்றைக்கு இடையில் நடந்த சம்பவங்களையே தாங்கிக் கொள்ள முடியவில்லையே? தொடர்ந்து இப்படி நடந்தால் எப்படி தாங்கிக் கொள்வது.



யாராவது துன்பப்படுவது என்றால் மாஸ்டருக்கு துன்பமாக இருக்கும். சில வருடங்களுக்கு முன்னர் இப்படித்தான் அவர் படிப்பித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடத்தில்

மாஸ்டருக்கு அந்த நிகழ்ச்சி ஞாபகம் வந்தது. மலரும் மலரின் இதழ்களாக விரியத் தொடங்கியது.

அந்த ரவுண் பள்ளிக்கூடதில் அவர் பள்ளிக்கூடத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்தபோது மிஸிஸ் சாந்தலிங்கம் என்னும் கோமதி ரீச்சரும் வேறு இடத்தில் இருந்து இடமாற்றம் பெற்று வந்திருந்தார்.

ஒரே காலக்கட்டத்தில் இருவரும் அப்பள்ளிக்கூடத்திற்கு வந்துசேர்ந்தபடியால் பரஸ்பரமான அறிமுகம் ஏற்பட்டிருந்தது.

அதுமாத்திரம் அல்ல இருவரும் ஒரேபஸ்சில் காலையில் பள்ளிக்கூடம் வந்து மாலையில் திரும்பபோக வேண்டியும் இருந்தது. அதனாலும் இருவரும் பழகும் சந்தர்ப்பங்களும் அதிகமாக இருந்தன. பொதுவாகவே ஏனையவர்களுடன் குறிப்பாக பெண்களிடம் கதைக்கும் சுபாவம் குறைவான மாஸ்டருக்கு கோமதிரீச்சருடன் தவிர்க்கமுடியாமல் அதிகம் கதைக்க வேண்டியதாயிற்று.

கோமதிரீச்சரின் கணவன் சாந்தலிங்கம் ஒருகிளாக்காக கச்சேரியில் வேலை செய்தார். ஆள் எப்போதும் அழகாக நாகரீகமாக டிரெஸ் பண்ணுவார்.

கைவிரலில் சிகரெட்புகை நித்தமும் பழியாகஇருக்கும். மத்தியானம் சாப்பாட்டுக்குமுன்னர் சாடையாக தண்ணிஅடிப்பார் பின்நேரத்தில் அது உச்சக்கட்டமாகும்.

பொழுதுபட அவர் வீட்டுக்கு வரும்போது கோமதிரீச்சர் நாலைந்து கோமதி ரீச்சர்களாக தெரியும் நிலையில் வெறி களிக்கூத்தாடிக்கொண்டிருக்கும்.

கூத்தாடும் வெறியின் ஆரோகண நிலையில் கோமதி ரீச்சரின் உடல் பந்தாக மாறியிருக்கும். அடி, உதை தாராளமாக மாறிவிடும்

பின்னர் அவர் களைத்து தரையில் விழுந்து ஓங்காளிக்க வீட்டின் ஒருபுறத்தே கோமதி ரீச்சர் கண்ணீர்விட்டு அழுது தன் மனச்சுமையை குறைத்துக்கொண்டு இருப்பார். குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாக பிறந்து செல்லமாக வாழ்ந்த மோமதி ரீச்சர் கணவனது செயல்பாடுகளால் தாய், தகப்பன், சகோதரர்

கள், உறவினர்கள் எல்லோரையும் பகைத்து தனிமைப்பட்டு கணவனின் கொடுமைகளை தானே பொறுத்து தனக்குள் ஜீரணித்து அது முடியாமல் யாரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது என்று தடுமாறி

கடைசியில் ஞானசுந்தரம் மாஸ்டரிடம் சொல்லி மனப்பாரத்தை குறைக்க முற்பட்டாள்

வெளியே படலையை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. தனது நினைவுகளை அறுத்தெறிந்துவிட்டு மாஸ்டர் படுக்கையை விட்டு எழும்பி வெளியேபோய் படலையை திறந்தார்.

கந்தசாமிதான் ''நித்திரையை குழப்பிப்போட்டேனே'' என்றுகேட்டபடி கந்தசாமி உள்ளே வந்தான்.

''இல்லை நானும் நித்திரைகொள்ளேல்லை''

''ஏன் மாஸ்டர்''

''என்னவோ தெரியேல்லை நித்திரை வரேல்லை. வாரும் வீட்டுக்கை'' ''வாறன்மாஸ்டர் வெளிகிட்டுக்கொண்டு வாங்கோவன் ஊரைசுற்றிப்பார்ப்பம் நான்நேற்றைக்கு வாறன்என்று சொல்லி ஏமாத்திப்போட்டன்''

''அதில ஒன்றுமில்லை கொஞ்சம் வெய்யில்தான் வெளிக்கிடுவம்'' ''ஓ அதுவும் சரிதான்''

''எனக்கு கொஞ்சம் பாத்திரங்கள் கழுவுறவேலை இருக்கு கழுவி வைச்சிட்டு வாறன் அதுவரையும் இதிலஇருக்கிற புத்தகங்களில் ஒன்றைப் பாருமன்''

''கனநேரம் செல்லுமோ மாஸ்டர்''

''இல்லையில்லை ஒரு பத்து நிமிடம்தான்''

''நானும் உதவிக்கு வரட்டோ''

''இது ஒன்றும் எனக்கு புதுவேலையில்லை கந்தசாமி, பெரிய வேலையாயும் இல்லை''என்று சிரித்துக்கொண்டு சொன்ன மாஸ்டர் பாத்திரங்களை கழுவபோனார்.

மீண்டும் தனிமையானதும் மனம்என்ற குரங்கு மரத்தில் ஏறிக்கொண்டது. கோமதிரீச்சரின் நினைவு பளிச்சிட்டது.

நாளாந்தம் சிறிது சிறிதாக கதைக்கும்போது தனது குடும்ப விருத்தாந்தங்களை ரீச்சர் சொன்னாலும் அதனை மாஸ்டர் பதில் ஏதும் ஆலோசனையாகவோ, அறிவுரையாகவோ கூறாமல் அனுதாபத்துடன் கேட்டார்.



நாட்கள் கனிய முதல்நாள் நடந்த விடயங்களை அடுத்த நாள் துயரம் கொப்பளிக்க சொல்லும்போது உண்மையில் மாஸ்டர் வேதனை படுவார்.

மனைவியை மிருகமாக அதைவிட கேவலமாக மதித்து காரணம் இல்லாமல் துன்பப்படுத்தும் சாந்தலிங்கம் போன்ற ஆட்களை என்னவென்று சொல்லுவது?

கல்லானாலும் கனவன், புல்லானாலும் புருஷன் என்ற பாரம்பரிய கோட்பாட்டினாலா இப்படி துன்பப்படவேண்டியுள்ளது?. படித்த உழைக்கும் ஒரு பெண்ணுக்கே இந்த நிலை என்றால்

கோமதிரீச்சர் உண்மையிலேயே பெரிய கெட்டிக்காரிதான் இவ்வளவு நாட்களும் கணவனின் கொடுமைகளை பொறுத்துக் கொண்டு வாழ்வது மட்டுமல்லாமல் தனக்கு மிக வேண்டியவர்களையும் இழந்து சமூகத்தின்முன்னால் அனுதாபப் பார்வைகளை அல்லது உவவுக்குவேனும் என்ற சாபங்களைப்பெற்று வாழ்வது என்னும்போது

அட்போதெல்லாம் மாஸ்டர்இவ்விதம் நினைப்பார். அவ்வாறான நினைவுத்தடங்கள் ஏற்படுத்திய மனநெகிழ்ச்சியின் உந்துதலினால் ''ரீச்சர் ஏதாவது செய்யமுடியாதா?''

''ஏதாவது என்றால்''

''அவரைக் குடிக்காமல் செய்ய இயலாதா?''

''ஒன்று செய்யலாம் அவரை குடிக்காமல் தடுக்க முயலுவதைவிட நானும் சேர்ந்து குடிக்க பழகுகிறதுதான் சுலபமானவேலை'' என்று சொன்ன கோமதி ரீச்சர் சிறிதுநேரம் மௌனமாகி பின்னர் ''மாஸ்டர் அவரைப் படைத்த கடவுள் வந்தால்கூட குடியை நிற்பாட்டுவாரோ தெரியாது'' என்று சொல்லும்போதே ரீச்சரின் கண்கள் கலங்கின.

மாஸ்டரின் நிலை சங்கடமானது ''அவருக்கு தெரிஞ்சஆட்கள் யார்மூலமாவது சொல்லேலாதா?'' குடிக்காட்டி கதைக்கவேண்டியவிசயங்களை கூடகதைக்க மாட்டார். குடித்தால் கதைக்க கூடாத கதைகளையெல்லாம் கதைப்பார். அப்படிப்பட்டவரை என்ன செய்வது மாஸடர்'' என்று வேதனை கலந்த சிரிப்புடன் கேட்டார் கோமதி ரீச்சர்.

அதற்கு மாஸ்டரால் பதில்சொல்ல முடியவில்லை

ஒருநாள் காலை வரும்போதே கோமதி ரீச்சரின் கண்கள் கலங்கியிருந்தன, முகம் சிவந்திருந்தது.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

''என்ன நடந்தது ரீச்சர்'' என்று கேட்டாலே கண்ணீர் குபுக்கென்று பாய்ந்துவிடும் என்ற நிலை

மாஸ்டர் கேட்கவும் பயந்து கேட்காவிட்டாலும் மனம் சஞ்சலப்படும் என தடுமாறிக்கொண்டு இருக்கும்போதே கோமதி ரீச்சரே சொன்னுர்

முதல்நாள் பின்னேரம் பள்ளிக்கூடத்தால் போன ரீச்சர் சிறிதுநேர ஓய்வின்பின்னர் இரவுநேர சமையலுக்காக குசினிக்குள் போய்விட்டார்.

மாலை ஆறுமணிக்கு வழக்கம்போல சரீரம் தள்ளாட வந்த சாந்தலிங்கம் பூட்டியிருந்த வெளிக்கதவை தட்டோ தட்டென்று தட்ட

கோமதிரீச்சர் போய் கதவை திறக்க சற்று தாமதமாகிவிட்டது. ''என்னடி செய்தனி இவ்வளவுநேரம் என்று கேட்ட சாந்தலிங்கம் காலைத் தூக்கி ரீச்சரை உதைய

உதை இடுப்பில் விழுந்தது. பயங்கரமான வலி ''அம்மா'' என்று கத்த நினைத்தாலும், கத்தமுடியவில்லை. உதைத்தவேகத்தில் சாந்தலிங்கமும் எதிர்புறமாக நிலைதடுமாறிதரையில் விழுந்தார்.

ரீச்சர்பேசாமல் வீட்டுக்குள் போய்விட்டார்.

தட்டுத்தடுமாறி எழுந்த சாந்தலிங்கம்

''எடியேய் என்னை தள்ளிவிழுத்திப்போட்டாய் உனக்கு புருஷன்என்ற மரியாதை இருக்கோ என்று சத்தம் போட்டுக் கொண்டு உள்ளேவந்தார். பிறகு

கையில்அகப்பட்ட தும்புத்தடியால் விளாசுவிளாசு என்று விளாசித்தள்ளிவிட்டார். தப்பிஓடி அறைக்குள்சென்று கதவை பூட்டியபிறகுதான் ரீச்சரால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

பூட்டியஅறைக்குள் மனவேதனை உடல்வேதனைதீர விம்மி விம்மிஅழுது பிறகு நினைத்து நினைத்து அழுது தன் விதியைநினைத்து எதிர்காலத்தை நினைத்து பெண்ணுய்பிறந்ததே அழுவதற்காக என அழுதழுது இரவுமுழுக்க அழுது

இந்தக்கதைகளை கேட்கமாஸ்டரின் கண்களும் கலங்கின.

''நேற்றுஇரவு தற்கொலைகூட செய்யலாம் என்றுநினைத்தேன் ஆனுல் அதற்குரிய மனுேபலம் எனக்குவரவில்லை'' என்று கோமதிரீச்சர் சொன்னுர்.

''சீச்சி அப்பிடியெல்லாம் யோசிக்காதேங்கோ தற்கொலை செய்யிறதுஎல்லாம் கோழைத்தனமான செயல்''



''அப்படியில்லை மாஸ்டர் இவ்வளவு வேதனைகளோடை வாழுறதைவிட செத்துப்போறது எவ்வளவு நல்லது ஏதோ நான் செய்த புண்ணியம் பிள்ளைகள் இல்லாமல் இருப்பது. பாருங்கோ மாஸ்டர் எல்லாப்பெண்களும் பிள்ளைகள் பிறக்க புண்ணியம்செய்ய வேனும் என்று சொல்லுவினம் என்ரநிலையை எப்பிடி சொல்லுவது''

''நீங்கள் கவலைப்படாதேங்கோ ரீச்சர் உங்களுக்கொரு நல்ல காலம் வந்தே தீரும்''

''எப்படியொரு நல்ல காலம்?''

''சந்தோஷமான குடும்ப வாழ்க்கை நிறைந்த நல்ல காலம் தான்.''

''உங்களுக்கு அப்படியொரு நம்பிக்கையும் இருக்கிறதா? சாகும்போதாவது நிம்மதியாக வேதனை இல்லாமல் சாவேன்என்று தெரியாது'' எனக் கூறும்போது ரீச்சரின் விழிகளில் இருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

''ரீச்சர் அழவேண்டாம் யாராவது கண்டால் பிழையாக இருக்கும் அழாதேங்கோ. என்ன செய்யிறது எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை தரும்படி இறைவனை வேண்டுங்கோ''

''எனக்கு அந்த நம்பிக்கை கொஞ்சம்கூட இல்லை''

''அப்படி சொல்லாதேங்கோ''

''மாஸ்டர் நீங்களும்இப்படித்தான் செத்துப்போன உங்கடை பெண்சாதியை துன்பப்படுத்தினீங்களோ?

மாஸ்டர் வியப்புடன் கோமதி ரீச்சரைப் பார்த்தார். சிறிது நேரம் மௌனம் நிலவியது.

''நான் கேட்டது பிழையென்றுல் வேண்டாம்''

''இல்லை நான் பிழையாய் எடுக்கேல்லை சட்டென்று என்ரை பழைய வாழ்க்கையை நினைத்தால் கதைக்கமுடியவில்லை. அதுதான் காரணம் என்ரை குடும்ப வாழ்க்கை பத்துவருடம்தான் ஆனுல் சந்தோஷமான குடும்பவாழ்க்கை. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டவர்கள். நானும் என் மனைவியும் அதுகாரணமாக எங்களுடையில் பிரச்சனைகள் இருக்கவில்லை மிகுந்த அன்பாக வாழ்ந்தோம். அதுதான் இறைவனுக்கு பிடிக்கவில்லைபோலும் இடையில் மனைவியை பறித்துவிட்டார். என மாஸ்டர் கூறும்போதே அவரின் முகத்தில் சோகம் வெளிப்பட்டது. அவரது கடந்த கால நினைவுகளுக்குள் அவர் மூழ்கிப்போனுர்.

''மாஸ்டர் உங்களது நல்ல பண்புகளை எனக்கு தெரியும் தானே அதை வைத்துக்கொண்டே உங்கள் குடும்பவாழ்க்கை எப்படியிருந்திருக்கும் என்பதை என்னால் ஊகித்து பார்க்க முடிந்தது. என்றாலும் பேச்சோடு பேச்சாக கேட்டுவிட்டேன். உங்களைப் போல ஆண்களை கணவனாக பெற்றுக்கொள்ளுவதற்கு பெண்கள் கொடுத்துவைத்திருக்கவேண்டும். என்ன செய்வது என்னைப்போல இருக்கும் பெண்களின் தலைவிதிகள் இப்படி தலைகீழாக எழுதப்பட்டும் விடுகின்றன. எதிர்காலம் ஒன்று எங்களுக்கும் இருக்கா? என்று தெரியாது. நாளையபொழுது நல்லபொழுதாக விடியுமா? அல்லது இரவோடு இரவாக எப்போது மனவலிமை பெற்று கயிற்றில் தூங்குவதையோ, சிலீப்பிங் பில்சை போடுவதையோ செய்யப் போகின்றமோ?

''ஒன்றுக்கும் யோசியாதேங்கோ உங்களுக்கு ஏதாவது மிகச் சிக்கலான பிரச்சினைகள் ஏற்பட்டால் என்னாலான உதவிகளை செய்யச் சித்தமாக இருக்கிறேன். தயவு செய்து வீண் எண்ணங்களுக்கு இடம்கொடுத்து விபரீதமான முடிவுகளை எடுத்துவிடாதீர்கள்.'' என்று அன்புடன் ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

''உண்மையாக உதவி செய்வீர்களா?'' எனக் கேட்கும்போதே கோமதி ரீச்சரின் விழிகளில் இதுவரைநேரமும் காணப்படாத பிரகாசம் வெளிப்பட்டது.

''என்ன மாஸ்டர் பாத்திரங்களை வைத்துக்கொண்டு கழுவாமல் யோசினை?'' என்று கந்தசாமி கேட்டப்பின்னர் தான் மாஸ்டர் சுயநினைவுக்கு வந்தார்.

இதுவரைநேரமும் பழைய நினைவுகளில் தான் மூழ்கிப்போய் விட்டதை நினைக்க சிரிப்பாகவும் இருந்தது.

''ஒன்றுமில்லை கந்தசாமி பழைய பள்ளிக்கூடத்து நினைவு வந்தது அவ்வளவுதான். எனக் கூறியவாறு பாத்திரங்களை விரைவாக கழுவ தொடங்கினார்,

கழுவிமுடித்தப்பின்னர் தான் பக்கத்துவீட்டில் எழுந்த சத்தத்தை மாஸ்டர் கேட்டார். அர்த்தத்துடன் கந்தசாமியைப் பார்க்க அவன் மெதுவாக புன்னகைத்தான்.

''கெதியாய் வெளிக்கிடுங்கோ இப்பதான் தொடங்கியிருக்கு அது முற்றுபெற உச்சநிலையாகும் அதற்கிடையில நாங்கள் வெளியால போயிடுவம்''



''கந்தசாமி உனக்குபகிடியாக இருக்கு ஆனால்எனக்கு எவ்வளவுகஷ்டமாக இருக்கு தெரியுமே''

''கொஞ்சநாளைக்கு அப்பிடித்தான் மாஸ்டர் இருக்கும் நாளடைவில் பழகிவிடும் எங்களுக்கும் ஆரம்பத்திலஉங்களைப்போல கஷ்டமாகத்தான் இருந்தது. பிறகு இயல்பாகிவிட்டது.''

''இயல்பான நிகழ்ச்சியாக மாறிவிட்டாலும் இது ஒரு மனிதத்தன்மையில்லாதசெயல் இதை எப்படி நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கமுடியும்.''

''நாங்கள் என்னசெய்யலாம் மாஸ்டர்''

''தமக்கையாக இருந்தாலும் காரணமில்லாமல் கொடுமைப் படுத்துவதை தடுக்ககூடாதா''

' தடுக்கலாம்''

''பிறகேன் பேசாமல் இருந்தனீங்கள்''

''அதுக்கு காரணம் இருக்கு மாஸ்டர்''

''அதைத்தான் சொல்லுமன் கந்தசாமி''

''மாஸ்டர் அவள் வசந்தா ஒருமாதிரி''

''ஒருமாதிரி என்றால்''

கந்தசாமி பதில் சொல்லாமல் சிரித்தான். முகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன.

''மாஸ்டர் அவள் கெட்டுப்போனவள்'' என்று கந்தசாமி சொன்னதைக் கேட்ட அவர் திகைத்துப் போனார்.

வசந்தா கெட்டுப்போனவள் என்று கந்தசாமி சொன்னதால் திகைத்துப்போன அவருக்கு வார்த்தைகள் வெளிவராமல் தடம் புரண்டன.

''என்ன தம்பி சொல்றீர்? கெட்டுப்போனவள் என்றால் என்ன அர்த்தம்''

''மாஸ்டர் அவள் வசந்தா அப்ப நெசவுக்குப் போறவள் நெசவுக்கு போற அந்தக் காலத்தில் சங்கக்கடை ஒன்றில் நின்ற பெடியனைக் காதலிச்சவள் அவன் வசந்தாவை பழுதாக்கிப் போட்டு ஊரைவிட்டுப் போய்விட்டான். வசந்தாவின் உடற் கூற்றில் மாற்றம் ஏற்பட்டபின்னர்தான் எல்லோருக்கும் விசியம் தெரிந்தது. நல்லகாலம் குழந்தை செத்துத்தான் பிறந்தது.''

''பிறகு என்ன நடந்தது.''

"பிறகு என்ன நடக்கும் மாஸ்டர் தங்கடை மானத்தைக் காற்றில பறக்கவிட்ட அவளை இப்படித்தான் வைச்சிருக்கிருள். அக்கா சகுந்தலா"

"ம்..."

"எப்பவோ கெட்டுப்போனதற்காக பேச்சு, அடி மாத்திரம் அல்ல உதைகூட விழும். இன்றுவரை இந்த சித்திரவதைகள் தொடருகின்றன."

"தவறுதலாக கெட்டுப்போன பெண்ணுக்கு இது எவ்வளவு பெரிய தண்டனை கந்தசாமி! மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டிய ஒரு விடயத்தை இப்படி கேவலமாக்கினுல்?"

"அதை யார் யோசிக்கினம் மாஸ்டர். ஆனுல் அவள் வசந்தா என்னதான் நடந்தாலும் பேசாமல் அழுதுகொண்டிருப்பாள் அவ்வளவு பொறுமைசாலி"

"அது உண்மைதான் நேற்றுக்கூட தமக்கை கண்டபடி அடித்தும் அவள் இடத்தைவிட்டு அசையவில்லை... ஏன் கந்தசாமி அவள் வசந்தாவுக்கு வேறை யாராவது சொந்தக்காரர்கள் இல்லையே"

"இருக்கிருர்கள் மாஸ்டர் ஆனுல் யாரும் அவளை தங்களுடன் சேர்ப்பதில்லை தங்கள் பிள்ளைகளையும் அவள் பழுதாக்கிப் போடுவாள் என்ற பயம் அவர்களுக்கு வசந்தாவின் அக்கா கூட தன்னுேடை அவளை வைத்திருக்க விரும்பமாட்டாள் ஆனுல் வீட்டுவேலைகள் செய்ய ஆள் வேணுமே என்ற காரணத்திற்காக ஒரு வேலைக்காரி மாதிரி வைத்திருக்கிருள்" என்று கந்தசாமி சொன்னுன்.

மாஸ்டர் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து போனுர். முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்தன. வசந்தாவுக்காக அவர் கவலைப்பட ஆரம்பித்தார்.

நாட்கள் நகர கிணற்றடிக்கு வரும்போதெல்லாம் மாஸ்டர் வசந்தாவைக் கவனிக்க ஆரம்பித்தார். அவளைக் காணும்போது மனம் வேதனையில் சிக்கும் அவளது வாடிய முகம் அவன்பால் அதிக அக்கறையை ஈர்க்க முனைந்தது.

தினசரி சகுந்தலா வசந்தாவை கண்டபடி பேசுவதும் ஆக மிஞ்சினுல் கையில் அகப்பட்டதால் அடிப்பதையும் பார்க்கும் போதெல்லாம் அவரது அந்தரங்க ஆத்மா கிளர்ந்தெழும்



நான் என்ன செய்யலாம்? ஊரைவிட்டு ஊர் திரியும் நாடோடி வாத்தியாரால் தினமும் துன்பத்துடன் போராடும் கெட்டுப்போன பெண்ணுக்கு என்னவிதமான உதவியை செய்ய முடியும்.

யோசிக்க யோசிக்க, மிஞ்சியது விசர்தான் ஏனையவர்கள் வேதனைப்படுவதை பார்த்துக்கொண்டு எல்லோராலும் இருக்க முடியுமா?

எருமைத் தோல் போர்த்திக்கொண்டு சகலரும் வாழலாமா? நெருப்புக்கு கிட்ட இருந்துகொண்டு அதன் வெம்மையால் வேதனைப்படாமல் எங்கனம் சீவிப்பது.

மாஸ்டர் தன்னைத்தானே கேட்டுக்கொள்வார். இவையெல்லாம் பார்த்துக்கொண்டு தன்னுல் ஏன் இருக்கமுடியவில்லை நானும் ஏனையவர்கள்போல மழையில் நனையும் கருங்கல் தரையாக ஏன் மாறவில்லை?

அன்றைக்கு ஒரு விடுமுறைநாள் அதுகாரணமாக மாஸ்டர் வெகுநேரம் கழித்தே நித்திரையால் எழும்பியிருந்தார்.

வாயில் பிரஷ், தோளில் துவாய் சகிதம் கிணற்றடிக்கு வந்த மாஸ்டர் வழக்கம்போல பக்கத்து விறந்தையைப் பார்த்தார்,

விறந்தையில் யாரும் இல்லை பல்லைத் தீட்டிக்கொண்டு வேலிக்கரையோரமாக நடந்து வந்தபோது

அளவான உயரமுள்ள தென்னை மரமொன்றில் நீண்ட கொக்கத் தடியினைக்கொண்டு தேங்காய் பறித்துக்கொண்டு இருந்தாள் வசந்தா.

கழுத்து நரம்புகள் புடைக்க தலையை நிமிர்த்தி நுனிக்காலில் நின்று அவள் பட்ட கஸ்டம். அறுத்த தேங்காய் ஒன்று ஓலைவழியாக நழுவி மாஸ்டரின் வளவுக்குள் விழுந்தது.

அப்போதுதான் வசந்தா மாஸ்டரைக் கண்டாள் சிலவினாடிகள் அழுத்தமாக பார்த்தாள். பார்வையில் வித்தியாசம் இருக்கவில்லை

மாஸ்டர் தேங்காயை எடுத்துக்கொண்டு வேலியை நெருங்கினுர். ஆனுல் கொடுக்கவில்லை வசந்தாவும் கையை நீட்டவில்லை

"யாரையாவது கொண்டு பறிக்கமுடியாதா?" என ஏதாவது கேட்கவேண்டும் என்பதற்காக கேட்டார்.

''யாராவது ஆள் என்றால்'' என வசந்தா பதிலுக்கு கேட்டாள்

''கூலிக்கு ஆள்பிடித்து''

''அது நான்தானே பிறகுஎப்படி வேறுஆளை பிடிப்பது''

மாஸ்டர் சிறிது தடுமாறிப்போனார் வசந்தாவின் அந்தக் கேள்விக்கு பதில்சொல்லமுடியாமல் போய்விட்டது.

''தேங்காய் பிடுங்குவதெல்லாம் கஸ்டமான வேலையல்லவா? மாஸ்டர் கேட்டார்.

''என்னைப்பொறுத்தவரை கஸ்டம் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது.''

''ஏன் அப்படி சொல்லுகின்றீர்கள்''

''நீங்கள் வந்த இத்தனை நாட்களுக்கு இடையில் அதனை உணர்ந்திருக்காவிட்டால் நான் இப்போது விளங்கப்படுத்தினாலும் உங்களுக்கு விளங்காது.''

வார்த்தைகளை அளந்து, அளந்து பேசுவதைப்போல அவள் பேசினாள். ஒவ்வொரு சொல்லும் கல்லின்மீது பட் பட்டென்று விழும் உளியாக அழுத்தம் திருத்தமாக அவள் கதைத்ததைக் கேட்க மாஸ்டருக்கு அதிசயமாக இருந்தது.

''என்னால் உணரமுடிகின்றது. வந்த அன்றே எல்லாவற்றையும் புரிந்துகொண்டவன் நான். என்ன செய்வது கடவுள் சிலநேரங்களில் சில வேதனைகளை கொடுக்கின்றார்.''

''ஆனால் என்னைப் பொறுத்தவரை வாழ்க்கை முழுக்க சோதனைதான். அடுத்தபிறவியிலையும் இந்த சோதனை தொடரும்.''

''அப்படிச் சொல்லாதீர்கள் என்றோ ஒருநாளைக்கு உங்கள் வேதனை தீரும்''

''கனவில்கூட என் கவலைகள் தீரப்போவதில்லை என்பது நிட்சயம்'' எனக் கூறும்போதே வாழ்க்கையின் வெறுப்பு தெரிந்தது

''எடியேய் வசந்தா என்ற சத்தம் இடியிடித்ததுபோல வசந்தாவின் வீட்டில் இருந்து வெளிப்பட வசந்தா திடுக்கிடவில்லை.

மாஸ்டர்தான் பயந்துபோனார். சத்தம் வந்த திசையை நோக்கினார் சகுந்தலாவைக் காணவில்லை

மீண்டும்

''எடியேய் என்னடி செய்கிறாய்...''



காதைப் பிளக்கவைத்த அந்த சத்தத்தினால் நிலைகுலைந்த மாஸ்டர் பரிதவித்துக்கொண்டு அங்கும் இங்கும் பார்த்து தடுமாற

''நீங்கள் பயப்படவேண்டாம் அந்த புயல்காற்று இஞ்சை வந்தால் என்னைத் தாக்குமே தவிர உங்களை எதுவும் செய்யாது''

''இல்லை நீங்கள் போங்கோ ஏன் வீணாக கஸ்டப்படவேண்டும் இந்தாங்கோ தேங்காய்'' எனக் கூறிவிட்டு விரைவாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார் மாஸ்டர்.

அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்த வசந்தா சற்று நேரம் தாமதித்து தரையில் கிடந்த தேங்காய்களை பொறுக்கி கடகத்தினுள் போட்டுக்கொண்டு நடந்தாள்.

வீட்டின் பின் விறுந்தையை அவள் அடைந்தபோது சகுந்தலா நித்திரை கலைந்த முகத்துடன் அங்கு தோன்றினாள்.

''என்னடி தேவடியாள் ஆடி, ஆடி வாறாய். விடிய எழும்பி தேங்காய் பிடுங்க இவ்வளவு நேரமே'' என்று கேட்பதும் மாஸ்டருக்கு கேட்டது.

மாஸ்டர் துலாவினால் தண்ணீர் அள்ளி, குளிக்க தொடங்கியதும் வசந்தாவின் நினைவு கவ்விக்கொண்டது. சோகமான முகத்துடன் அவளது வேதனை ததும்பிய வார்த்தைகளும் நினைவுக்கு வரவே நெஞ்சத்தை ஊசிமுனையால் குத்துவதைப்போல கஸ்டப்பட்டார்.

நான் எதற்காக வேதனைப் படவேண்டும் வேதனைப்பட்டு என்ன செய்யலாம்? இவ்வாறு வேதனைப்பட்டு முன்பொரு தடவை படித்த பாடத்தை மறந்து போய்விட்டேனா?

பலநாட்களுக்குப் பிறகு மீண்டும் கோமதி ரீச்சரின் உருவம் மனக் கண்ணில் தெரிந்தது.

'உண்மையாக உதவி செய்வீர்களா' என்று புருஷனிடம் தும்புத்தடி அடிவாங்கியபிறகு ஏற்பட்ட வேதனைகளை சொன்னபோது மாஸ்டர் சொன்ன ஆறுதல்களை தொடர்ந்து கோமதி ரீச்சர் மாஸ்டரிடம் கேட்டிருந்தாள்.

அடுத்தநாள் கோமதி ரீச்சரிடம் மாறுதல் தெரிந்தது. முகத்தில் சோகம் வெளிபட்டு இருந்தாலும் அதையும் மிஞ்சிய ஏதோ ஒருவகையான சுறுசுறுப்பும் தென்பட்டது.

கொஞ்சம் உற்சாகமாகவே கோமதிரீச்சர் இருப்பது மாஸ்டருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. அதுகாரணமாக தான் கதைப்பதைக் குறைத்துக்கொண்டார்.

ஆனால் கோமதி ரீச்சர் அடிக்கடி வந்து கதைத்தார் இந்த சூழ்நிலை சிலநாட்களே நீடித்தன

ஒருநாள் அன்று திங்கட்கிழமையாக இருக்கவேண்டும் அழுது கலங்கிய விழிகளுடன் ரீச்சர் வந்தார்.

என்னவென்று கேட்காமலே பெரிதாக ஏதோ நடந்திருக்க வேண்டும் என்பனத உணர முடிந்தது.

'மாஸ்டர் இனிமேலும் எனக்கு சமாதானம் சொல்லவேண்டாம் என்னால் இனி பொறுத்துக்கொள்ள முடியாது நிலைமை அவ்வளவு மோசமாகிவிட்டது.'

'என்ன நடந்தது ரீச்சர்? என்று படபடப்புடன் கேட்டார் மாஸ்டர்.

'மாஸ்டர் எத்தனை நாளைக்குத்தான் என்னால் வேதனைகளை தாங்கிக்கொள்ள முடியும் பேச்சு, அடியோடு நின்ற துன்புறுத்தல் இப்ப...?என்று வார்த்தைகளை முடிக்க முடியாமல் தடுமாறி இயல்பாகவே மாறிவிட்ட கண்ணீரை பெருக்கதொடங்க

'தயவு செய்து அழவேண்டாம் அழாமல் என்னவென்று கூறுங்கள் மாஸ்டரின் முகம் பரிதாப நிலையில் இருந்தது.

'மாஸ்டர் எப்படிச் சொல்லுவது நேற்றைக்கு மீண்டும் தடுமாற்றம்.

'நேற்றைக்கு?

பின்னேரம் வழக்கம்போல வெறியில வந்த ஆள் என்னை அடிக்கேல்லை பேசேல்லை.

'பிறகு மாஸ்டரின் நெஞ்சு படக் படக்கென்று அடிக்க ஆரம்பித்தது'

'குசினிக்குள் நின்ற எனக்கு அடுப்பில் இருந்த நெருப்புக் கொள்ளியை எடுத்து இடுப்பிலும், முதுகிலும் சூடுபோட்டுவிட்டார். என கோமதி ரீச்சர் சொல்லிக்கொண்டு சத்தங்கேட்காத வாறு வாயைப் பொத்திக்கொண்டு அழத்தொடங்கினார்.

மாஸ்டருக்கே அழுகை வந்துவிடும்போல இருந்தது என்ன கொடுமை இப்படியும் நடக்குமா? இவ்வாறு செய்பவர்களை மனிதர்களாக மதிக்கமுடியுமா' என குமுறிக்கொண்டே யோசித்தார்



அதுகாரணமாக கோமதி ரீச்சருக்கு அவரால் ஆறுதல் சொல்லமுடியவில்லை கொடுமையிலும் துன்புறுத்தலிலும் படிப்படியான முன்னேற்றம் இதன் அடுத்தகட்டம்

நினைத்துப் பார்க்க மாஸ்டரின் உடல் நடுங்கியது.

'என்ன மாஸ்டர் சொல்ல நினைக்கிறியள்' என்று கோமதி ரீச்சர் கேட்டும் மாஸ்டரால் பதில் சொல்லமுடியவில்லை.

'மாஸ்டர் வெளிப்படையாக கேட்கிறன் என்று குறை நினைக்ககூடாது என்னையும் என் மனத்தையும் நான்படும் துன்பங்களையும் அறிந்து எனக்கு ஆறுதல் சொல்லுற ஒரே ஆள் நீங்கள் தான் அந்த நம்பிக்கையில் கேட்கிறன் நீங்கள் உதவி செய்தால் நான் அவரை என்ற புருஷன் என்கிற மிஸ்டர் சாந்தலிங்கத்தை டைவர்ஸ் செய்யலாம் என்று நினைக்கிறன்'

'டைவர்ஸ் செய்துவிட்டு' மாஸ்டர் கேட்க

அவரை ஆழமாக பார்த்த கோமதி ரீச்சர் 'அதுதான் முதலே சொன்னனான் நீங்கள் உதவி செய்தால் அதாவது நீங்கள் என்னை கலியாணம் செய்ய சம்மதித்தால் நான் அவரை டைவர்ஸ் செய்துவிடுவேன் என்றார்.

பிளாட்போமில் வந்து நிற்கும் புகையிரதத்தின் பெட்டிகள் அதிர்ந்து குலுங்குவதுபோல மாஸ்டர் கடகடத்துபோனார்

இப்படியான ஒரு கேள்வியை கோமதி ரீச்சர் கேட்பார் என்று கொஞ்சம்கூட நினைத்திருக்கவில்லை, முகமெல்லாம் கறுத்து உதடுகள் துடித்தன.

அவருடைய நிலையைக் கண்டு கோமதி ரீச்சர் பதைபதைத்து தான் கேட்டதன் விளைவாக மாஸ்டரில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மையினை உணர ஆரம்பித்தாள் அதன் விளைவாகவோ என்னவோ கண்ணீர் பெருக

''மாஸ்டர் நான் பிழையாக ஏதாவது கேட்டிருந்தால் மன்னித்துவிடுங்கள். நான் அனுபவிக்கும் வேதனைகள் அதற்கு நீங்கள் சொன்ன ஆறுதல் அதனால் நான் அடைந்த நிம்மதி இவையெல்லாமே என்னை...''வார்த்தைகளை முடிககாமல் கோமதி ரீச்சர் பட்டபாடு.

இப்போது நினைத்தாலும் உச்சி வெய்யிலில் தார்றோட்டில் நடக்கும்போது ஏற்படும் பதைபதைப்பதுபோல மனம் துன்பப் படுகிறது.

கோமதி ரீச்சருக்கு எவ்வளவோ ஆறுதல் சொல்லி அவரை சமாதானப் படுத்தி நாளது தேய, தேய கோமதி ரீச்சருடன் கதைப்பதை குறைத்து

தான் செய்தது சரியா? பிழையா என்பதைக்கூட அவரால் தீர்மாணிக்க முடியவில்லை துன்பக்கடலில் தத்தளிக்கும் ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்திருக்கலாம் உள்மனம் சொன்ன அதே நேரத்தில்

இதுவரை காலமும் தான் கட்டிக்காத்துவரும் நல்ல பெயர் கழுதை சேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக மாறிவிடுமா என்ற பயத்தினால் தான் கோமதி ரீச்சரின் வேண்டுகோளை கேட்டு நிராகரித்து தொடர்ந்தும் நல்லபிள்ளையாக

மாஸ்டர் திரும்பவும் சுயநினைவுக்கு வந்தார் கோமதி ரீச்சர் கேட்டமாதிரி வசந்தாவும் கேட்டுவிட்டால்?

நினைக்கவே கலக்கமாக இருந்தது ஏன் இந்த வீண் பிரச்சனை நான் உண்டு, என் வேலை உண்டு என பேசாமல் இருந்துவிட்டால்

ஆனால் பேசாமல் இருக்க முடியுமா? மீண்டும் மீண்டும் வேதனைத் ததும்பும் வசந்தாவின் முகம் தோன்றி மறைய தலையை மோதி உடைக்கவேணும் போல இருந்தது.

கிணற்று மிதியில் நின்று இப்படி குழம்பிய மாஸ்டர் சகுந்தலாவின் சத்தத்தைக் கேட்டு விறந்தையைப் பார்த்தார்.

தேங்காய் கடகத்தை விறுந்தையில் வைத்துவிட்டு நிற்கசகுந்தலா பேசுவது மிகத் தெளிவாக அழுத்தம் திருத்தமாக

"என்னடி ஏன் நெடுக வேலிப்பக்கம் போய் மினைக்கெடுறாய் என்று எனக்கு இப்ப கொஞ்சநாளாய் விளங்குது. உது சரிவராது பக்கத்துவீட்டு வாத்தியாரில கண் வைச்சிட்டாய்போல இருக்கு அதுதான் நெடுக வேலிப்பக்கம் போய் நின்று வாத்தியாருக்கு கண்ணைக் காட்டுகிறாய்போல அந்த வாத்தியாரும் வாழ்விழந்த வாத்தியார்தானும் ஆனால் ஆள்நல்லமனிசன் உன்ரை நோக்கத்துக்குச்சரிவரமாட்டார்" என்று சொல்லிக்கொண்டு போனது

சனசமுத்திரத்தின் மத்தியிலே நிர்வானமாக்கி விட்டவர் போல மாஸ்டர் கூனிக்குறுகி உடலில் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் பூத்து

என்னைக் கண்டுதான் பேசுகிறாளா? காணமல் பேசுகிறாளா? எங்கையாவது ஓடிப்போய் ஒளிக்கவேணும் என்றுகூட நினைத்தார்.



தான் வந்த சிலநாட்களுக்கு இடையில் இப்பிடி ஒரு கதை வெளிக்கிடுவது என்றால்? சகுந்தலா தன்னைப்பற்றி கூடாமல் ஏதாவது சொல்லிவிட்டாலும்கூட வசந்தாவை பேசும் சாட்டில் தன்னுடைய பெயரையும் இழுத்திருக்கும் அவள்

வசந்தாவடன் தான் கதைத்ததைக் கண்டிருந்தால் எப்படி பேசியிருப்பாள்? நினைத்துப் பார்க்கவே வயிற்றைக் கலக்கியது.

இதே கதையை சகுந்தலா ஊராட்கள் முன்னால் பேசியிருந்தால் எப்படியிருக்கும்? கதைகள் வெவ்வேறு விதமாக உருமாறி கடைசியில் ஊர்முழுக்க வித்தியாசமான முறையில் பரவி தன்னைக் கூடாதவனை மாற்றி மானங்கெட வைத்துவிடும். ஊராட்கள் எல்லோரும் கேலி செய்வார்கள் தற்போது இருக்கும் மரியாதை எல்லாமே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் அதன் விளைவு

நினைக்கப் பார்க்கவே தலை சுற்றியது. அப்படியான ஒரு நிலையினை எதிர்கொண்டால்? உடம்பு பதறஆரம்பித்தது. எதற்காக இந்த தலையிடி

அமைதியான ஓடைபோல் இருக்கும் என்வாழ்க்கையை என் சாமப்பியமாக்க வேண்டும். என்வாழ்வை நானே குழப்பிக் கொள்வதால் எனக்குத்தான் என்ன நன்மை?

பேசாமல் இந்த வீட்டைவிட்டு போய் விடுவோம் இதைவிட அமைதியானஇடமாக தெங்கிவிடுவோம் ஊரைவிட்டே போனால் இன்னும் நல்லது

குலத்தின் நடுவே கல்லெறிந்தால் வட்டம் வட்டமாக அலைகள் பொரிந்துகொண்டு போவதுபோல அவருடைய யோசனைகளும் விரிந்துகொண்டு போனது.

ஆனாலும் அந்தப் பிரச்சனையான நேரத்திலும்கூட வசந்தாவின் சோகமான முகமும் மாயக் கவர்ச்சி நிறைந்த விழிகளும் அவர் மனக் கண்முன் நிழலாடின அதனைத் தொடர்ந்து அவர் இதயத்தில் விபரிக்கமுடியாத வலி உண்டானது.

அவள் எப்படி இருந்தால் என்ன? எவ்வாறு போனால் என்ன? என்று கேள்விகளை மனம் எழுப்பினால் அவற்றை எல்லாம் மீறி அவள் நினைவை அவர் சோகமான முகத்தை மறைக்கமுடியவில்லை

இப்படியான பலவிதமான மனப்போராட்டங்களின் காரணமாக நிம்மதி இல்லாமல் தவித்த மாஸ்டர்

விளைவு வீட்டை விட்டு வெளிக்கிடுவதை குறைத்துக்கொண்டார். கிணற்றடிக்கு வருவது என்றால்கூட வசந்தா தங்கள்வீட்டு விருந்தையில் இல்லாத சமயங்களில்தான் வருவார்.

இவ்வாறாக வசந்தாவையோ அல்லது சகுந்தலாவையோ தான் கண்டுகொள்ளாமலும் தன்னை அவர்கள் காணமுடியாத மாதிரியுமாக சில கட்டுப்பாடான நடவடிக்கைகளை அவர் வகுத்துக்கொண்டார்

இன்று சனிக்கிழமை மாஸ்டர் கிணற்றடியில் உடுப்புக்களை தோய்த்துக்கொண்டிருந்தார். விரைவில் கிணற்றடியை விட்டுப் போய்விடவேண்டும் என்ற நோக்கத்தில் தனது செயல்பாட்டில் விரைவாக இருந்தார்.

விரைவாக கிணற்றடியை விட்டுப் போகவேண்டும் என செயல்பட்டாலும் மனம் ஏதோ விதத்தில் பரிதவிக்க முற்பட்டது

அந்த பரிதவிப்பின் மூலமாக தன்னை மறந்தநிலையில் பிரிந்து போயிருந்த வேலியினூடாக 'அவர் பார்வை பக்கத்துவீட்டின் பின் விருந்தைபக்கம் சென்றது. அங்கு யாருமில்லை

ஆனால் அப்போது வசந்தா விருந்தையை நோக்கி நடந்து வந்ததும், பிறகு சுவரோடு சாய்ந்து இருந்ததும் மாஸ்டருக்கு தெரிந்தது. அவர் தடுமாறிப்போனார்

இந்தசமயத்தில் சகுந்தலா வந்தால் தர்மசங்கடமாகிவிடும் விருந்தையில் வசந்தா, கிணற்றடியில் தான் இரண்டுபேரையும் சேர்த்து அவள் வாய் பொழிந்து தள்ளிவிடும் இது என்ன கஸ்டகாலம் என மனம் பதைத்து தன் கருமங்களை முடிக்க முனைய

''என்னடி'' என்ற குரலோசை இடித்தது சகுந்தலாவின் குரல் காண கடூரமாக செவிப்பறையை துளைத்து சின்னாப்பின்னப்படுத்தியது.

தன் தலையை நிமிர்த்தாமலே மாஸ்டர் சகுந்தலாவைப்பார்த்தார் வழக்கமாகவே சர்வ அலங்கார ரூபியாக விளங்கும்அவள் இப்போது முகம் தெரியாத மேக்கப்பில் செயற்கையாக மினுமினுத்தன.

தலையை மறைக்கும் கொண்டையும், அது தெரியாத கன காம்பரமும், பளீர், பளீர் என மின்னும் நகைகளும், காஞ்சிபுரம் சேலையுமாக நின்ற அவள் கையில் தேனீர் குவளை ஒன்றும் இருந்தது.



''என்னடி தேத்தண்ணியை ஊற்றி வைத்தால் யாருக்குத் தெரியும்? அதைக் கொண்டுவந்து தரத் தெரியாதோ? பச்சைத் தண்ணிமாதிரி ஆறிப்போச்சு இதை நீயே வைச்சுக் குடியடி என்று சொல்லிக்கொண்டு தேனீர் குவளையை வசந்தா முன் எறிய அது எதிரே இருந்த தூணோடு மோதி பின் வசந்தாவின் கன்னத்தைத் தாக்கி தரையில் வீழ்ந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த மாஸ்டருக்கு இந்தக் காட்சியைக் கண்டதும் மாரிகாலத்துக் கிணற்றில் விழுந்தவர்போல் ஆனார்.

மூச்சு திணறுவதுபோல கஷ்டப்பட்டு மனம் துடிக்க அந்த காட்சியை சீரணிக்கமுடியாதவர் ஆனார். அப்போதைய சூழ்நிலையில் தனது மனக்குழப்பங்கள் யாவற்றையும் மறந்து ஆத்திரம் அடைந்தார்.

''சீ என்ன மனிதர்கள் மனிதர்களா? மனித தன்மையில்லாத மிருகங்கள்ஒரு சொந்த தங்கச்சியை இவ்வாறு சித்திரவதை செய்யும் இவளும் ஒரு பெண்ணா' வெட்கமில்லாமல் அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டுவிட்டாளே'' என தன்னைத்தானே கேட்டு பதில் கிடைக்காமல் தவித்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் சகுந்தலா வீட்டு வாசலுக்கு வந்த காரில் போய்விட்டாள் சிறிதுநேரம் மயான அமைதி நிலவியது.

மனம் இறக்கை கட்டிக்கொண்டு பறக்க ஆரம்பித்தது. சற்று படபடப்பு அடங்கியவராக வசந்தாவைப் பார்த்தார். அவளது இடதுபக்க கன்னத்தில் இருந்து ரத்தம் வடிந்துகொண்டிருந்தது

ரத்தத்தைக் கண்டதும் அடங்கிபோயிருந்த வேதனை அதிகமானது. வசந்தாவுக்கு ஏதாவது ஆறுதல் சொல்வோமா? எல்லோரும் கெட்டவர்கள் அல்ல நல்லமனிதர்களும் இருக்கிறார்கள் ஏனையவர்களின் துன்பத்தில் பங்கு கொள்பவர்கள் அனுதாபம் உடையவர்கள் உள்ளனர் என்பதை உணர்த்துவோமா?.
என்றாலும் மனம் பழையபடி தன் கோமாளிதனத்தைக் காட்டியது. சகுந்தலா அன்றைக்கு பேசியதுதான் இன்றுபோய் வசந்தாவுக்கு ஆறுதல் சொல்வதால் உண்மையாகிவிடுமே? எனவும் பயந்தார்.

இத்தனை மனப் போராட்டங்களும் ஏர்பூட்டிய உழவுகள் போல சுற்றிச்சுற்றி சுழண்டாலும் இவை எல்லாவற்றையும்

மீறிய சக்தி ஒன்று அவரை எழவைத்து வேலிக்கரையோரமாக நடக்கவைத்தது.

வசந்தாவின் வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதும் துணிச்சலைக் கொடுக்கவே வேலிக்கரையோரமாக போய்நின்று வசந்தாவை விழிகளால் துளாவினார்

அவளும் தற்செயலாக மாஸ்டரைப் பார்த்தாள் விழிகள் ஒன்றை ஒன்று சந்தித்து பரஸ்பரம் ஆதரவு தெரிவித்தன. சில வினாடிகள் விடாமல் தன்னையே வசந்தா பார்த்தது புதுமையான உணர்வினைக் கொடுத்தது.

வார்த்தை ஜாலங்கள் இல்லாமல் இருவரும் வெறுமனே பார்வையால் பேசிக்கொள்ள முனைந்தார்கள் பார்வையினால் பேசும் பேச்சின் தாகத்தினை தாங்கமுடியாத மாஸ்டர் அதனைத் தவிர்ப்பதற்காக வசந்தாவிடம் பேச்சு கொடுக்க முனைந்தார்.

எதைக் கேட்பது எவ்வாறு வினவுவது என்பதைப் பற்றி சிறிது நிதானித்து உணர்ச்சிவசப்பட்டவராக சாப்பிட்டுவிட்டீர்களா? எனக் கேட்டார்.

வசந்தா பதில்ஏதும் கூறவில்லை ஆனால் விருந்தையில் இருந்து எழுந்து வேலிக்கரையோரமாக வந்தாள். அங்கு நின்றவாறு மாஸ்டரை விநோதமாகப் பார்த்தாள்.

சிறிதுநேரம் இருவரும் எதுவுமே பேசவில்லை "என்ன கேட்டீர்கள் என வசந்தா கேட்டாள்.

மாஸ்டரால் பதில்சொல்ல முடியவில்லை அளவுக்கு மிறி உடல் படபடத்துக்கொண்டிருந்தது. அவர் மௌனமாக இருப்பதை உணர்ந்த வசந்தா திரும்பிச் செல்ல முற்பட்டாள். 'நில்லுங்கள்' என மாஸ்டர் அவளைத் தடுத்து நிறுத்த அவள் நின்று திரும்பி வேலியை நெருங்கி மாஸ்டருக்கு மிக அண்மையில் வந்தாள்.

வேலியைத் தடுப்பாக வைத்து இருவரும் மிக நெருக்கமாக ஒருவரை ஒருவர் பார்க்க ரத்தம் வடிந்துகொண்டிருந்த கன்னத்தை மாஸ்டர் உன்னிப்பாக நோக்கினார். குப்பென்று வேதனை நெஞ்சை அடைத்தது.

"என்ன கேட்டீர்கள்" மீண்டும் வசந்தா கேட்டாள்

"சாப்பிட்டுவிட்டீர்களா? என்றுதான் கேட்டேன்"

அவள் உதடுகளை பிரிக்காமல் சிரித்தாள் கன்னங்கள் துடித்தன



"நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? நான் சாப்பிட்டு இருப்பேன் என்று நீங்கள் உண்மையாக நம்புகிறீர்களா?" என்று அவள் கேள்வி எழுப்பினாள்

அவள் கேட்டதற்கு மாஸ்டர் எதுவுமே கூறவில்லை வசந்தா தான் வேதனை கலந்த சிரிப்புடன் தொடர்ந்து சொன்னாள்.

"எனக்கு சாப்பாடு இல்லாததுதான் குறையா? என்னை அன்போடு கவனித்து சாப்பாடு தர யார் இருக்கிறார்கள்? அன்பு என்றால் என்ன என்பதையே மறந்து எத்தனை நாளாகிவிட்டது. அதையெல்லாம் நினைத்து என்ன பிரயோசனம் நீங்கள் தான் இங்கு நடப்பதை பார்க்கின்றீர்களே எனக்கு நடக்கும் கொடுமைகளை. நான் உயிரோடு வாழ்ந்துகொண்டிருப்பதே மிகப் பெரிய அதிசயம் இத்தனை கொடுமைகளை,வேதனைகளை தாங்கிக்கொண்டு எவ்வாறு நான் சாப்பிடமுடியும்? என்று" கூறிக்கொண்டு வரும்போதே அவள் கண்கள் கலங்க ஆரம்பித்தன அவள் அழத்தொடங்கினாள்.

"நீங்கள் அழவேண்டாம் தயவுசெய்து அழுது வேதனையை அதிகரிக்காதீர்கள்" என ஆறுதல் கூறும்போதே மாஸ்டரின் கண்களும் கலங்கின

"சற்றுநேரம் இங்கு நில்லுங்கள்" என்க் கூறிக்கொண்டு மாஸ்டர் விரைவாக தன் வீட்டுக்கு ஓடினார்

அன்று சனிக்கிழமையானபடியால் அவர் வழக்கத்தை விட் விசேடமாக சாப்பாடு தயாரித்திருந்தார் திரும்பி வரும்போது தட்டில் சோறும் கறியும் போட்டு பக்குவமாக கொண்டுவந்தார்

"இந்தாருங்கள் சாப்பிடுங்கள்" என்று வேலிக்கு அப்பால் நின்று அவளிடம் அவர் தட்டை நீட்டினார்.

அவளுக்கு அந்த நிகழ்ச்சி புதுமையாகத் தெரிந்தது அவள் விழிகள் படபடத்தன உதடுகள் துடிக்க கைகள் நடுங்கின

"பரவாயில்லை தயவுசெய்து வாங்கிக்கொள்ளுங்கள் உலகத்திலே எல்லோரும் உங்கள் அக்காவைப்போல கெட்டமனிதர்கள் அல்ல" என்று மாஸ்டர் சொன்னார்.

அவள் உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் படிப்படியாக குறைந்தன. எந்தவிதமான பரபரப்பும் இல்லாமல் மாஸ்டரைப் பார்த்துக்கொண்டிருந்த அவள் சாப்பாட்டுத் தட்டினை வாங்கிக்கொண்டாள்.

அப்படி வாங்கும்போது பழையபடி கண்கள் கலங்கின கலங்கிய கண்களுடன் விருந்தையில்போய் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான்.

வசந்தாவில் இப்போது சற்றுமலர்ச்சி காணப்பட்டது. ஆனால் பழைய கோலம் மாறவில்லை மாஸ்டரைக் காணும்போது அவரது அன்பான பார்வை அவளுக்கு இதமாக இருக்கும்.

அன்றைக்கு பள்ளிக்கூடத்தால் வந்த மாஸ்டர் வீட்டினுள் படுத்திருந்தார் மெல்லிய உறக்கம். திடீரென அவர் உறக்கம் கலைந்தது சகுந்தலாவின் சத்தம் உரத்த சுருதியில் ஒலிப்பதை தொடர்ந்து யாரோ அடிவாங்கும் சத்தமும் கேட்டது.

நிச்சயம் வசந்தாதான் அடிவாங்குகின்றாள் என்பதை உணர்ந்த மாஸ்டர் விரைவாக வீட்டைவிட்டு வெளியே வந்து பின் பக்கம் போனார்

பக்கத்துவீட்டு பின்விருந்தையில் சகுந்தலா பத்திரகாளியாக நின்றுகொண்டிருக்க அவள் கையில் மொத்தமான ஒரு தடி அவள் எதிரே தலைவிரிகோலமாக வசந்தா காணப்பட்டாள்.

"சொல்லடி சொல்லு எங்கால இந்தப் பலகாரப் பார்சல் என்று சொல்லு" எனக் கத்தினாள் சகுந்தலா.

அப்போதுதான் சகுந்தலாவின் மறுகையைப் பார்த்தார் மாஸ்டர் அதில் ஒரு பார்சல் இருந்தது பார்சலைக் கண்டதும் மாஸ்டர் அதிர்ந்துபோனார் உடல் நடுங்கத் தொடங்கியது முதல் நாள் மாஸ்டர் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்த பலகாரப் பார்சல்தான் அது

"அது எப்படி சகுந்தலாவின் கைக்கு வந்தது வசந்தா உண்மையை சொல்லிவிடுவாளா?" என மாஸ்டர் யோசிக்க தொடங்கினார்.

"சொல்லடி கேடுகெட்ட நாயே! யாரடி தந்தவன் கெட்டுப்போற புத்தி உனக்கு இன்னும் போகவில்லையோடி" என்று சகுந்தலா கேட்க வசந்தா பதில் சொல்லவில்லை.

அதனால் எழுந்த ஆத்திரம் எல்லைமீற சகுந்தலா அவளை கண்டபடி அடிக்க தொடங்கினாள். சகுந்தலாவின் கையில் இருந்த தடி தாறுமாறாக வசந்தாவின் உடலில் விழுந்தது.

வசந்தா கூச்சலிடவில்லை, பதறவில்லை அசையாமல் நின்றாள் அவளது பின்பக்கம்தான் மாஸ்டருக்கு தெரிந்தது. அதனால் அவளது வேதனையை பார்க்கமுடியாவிடினும் அவரால் உணரமுடிந்தது



வசந்தா தொடர்ந்து எந்தவிதமான பதிலும் சொல்லாமல் மௌனமாக இருப்பது சகுந்தலாவிற்கு பயங்கரமான வெறியினை உண்டாக்கியிருக்கவேண்டும்

அதனால் "சொல்லடி சொல்லடி" என்று வேகமாக மூச்சு இரைக்க சொல்லிக்கொண்டு தடியால் அடிக்கும் பணியினை தொடர்ந்தாள்.

வசந்தாவின் உடலில் வீழும் அடிகளின் சத்தம் மாஸ்டரின் காதின் வழியாக உட்புகுந்து இதயத்தை சித்திரவதை செய்தன

அவள் தொடர்ந்து அடிவாங்குவதை அவரால் பார்த்துக் கொண்டு இருக்கமுடியவில்லை முதலில் போய் தடுக்க நினைத்தாலும் மனதைக் கல்லாக்கப் பார்த்தார்.

அடியின் வேகம் தொடர அவரால் மனத்தை ஒருநிலைப் படுத்தி நிற்கமுடியவில்லை

"எதற்காக இப்படி மனிததன்மை இல்லாமல் அடிக்கிறீர்கள்" என கேட்டுக்கொண்டு விரைந்து வேலியைத் தாண்டி ஓடினார் மாஸ்டர்.

மாஸ்டர் தங்கள் வளவுக்குள் வந்ததைக் கண்ட சகுந்தலா முதலில் தடுமாறிப் போனாள்

"உங்களை யார் வரச்சொன்னது வாத்தியார்" என அவள் அடித்த களைப்பினால் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியபடி கேட்டாள்

மாஸ்டர் அதற்கு பதில் சொல்லவில்லை "ஏன் இப்படி அடிக்கிறீர்கள்" என மீண்டும் கேட்டார்.

சகுந்தலா சிரித்தாள் "வாத்தியார் அவள் என்ரை தங்கச்சி அவளுக்கு நான் அடிக்கிறதை தடுக்கிறதுக்கு யாருக்கும் உரிமையில்லை நீங்கள் உங்கடை வேலையைப் பார்த்துக்கொண்டு பேசாமல் போறதுதான் நல்லது" எனச் சொன்னாள்.

"யாராக இருந்தாலும் உப்பிடி மனிசதன்மையில்லாமல் நடக்காதேங்கோ"

வாத்தியார் விசியம் தெரியாமல் கதையாதேங்கோ இவளைப் போல ஒரு கேடுகெட்டவள் உங்களுக்குத் தங்கையாக இருந்தா

லும் உங்களைப்போல ஆம்பிளைகள் கொலை செய்துபோடுவினம் நான் பெண் என்றபடியால் இப்படித்தன்னும் பாக்கிறன்''

மாஸ்டர் மேலும் ஏதோ கதைக்க முற்பட்டார் ஆனல் சகுந்தலா விடுவதாக இல்லை

''வாத்தியார் உங்களுக்கு ஏதும்தெரியாமல் மனிசத்தன்மைப் பற்றி கணக்க கதைக்கவேண்டாம் உங்களை நல்லமனிசன் என்று ஊராட்கள் கதைக்கிறபடியால் பேசாமல் இருக்கிறன். மரியாதை கெட்முதல் உங்கடை வீட்டை போய்சேருங்கோ'' எனக் கடுமையுடன் சொன்னுள் அவள்.

மாஸ்டர் அந்த அஸ்திரத்திற்கு கட்டுப்பட வேண்டியதாயிற்று அவர் வழுவிழந்து போய்விட்டார் பதில் ஏதும் கூறுமல் தன்வீட்டை நோக்கி நடந்தார்.

வசந்தாவில் எதுவிதமான மாற்றமும் ஏற்படவில்லை அவள் அசையாமலே நின்றுள்.

இந்த நிகழ்ச்சி நடந்தபிறகு மாஸ்டர் கொஞ்சம் அடங்கிப் போயிருந்தார்

சகுந்தலாவின் 'மரியாதை கெடமுதல் உங்கடை வீட்டை போங்கோ' என்ற வார்த்தைகளின் பின்னணியை முழுமையாக உணர்ந்ததாலோ என்னவோ மாஸ்டர் அடங்கவேண்டியதாகி விட்டது.

அன்று பாடசாலைக்கு போன மாஸ்டருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது

காரணம் இடமாற்ற கடிதம்தான் அடுத்தமாதம் தொடக்கம் அறுபது கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருந்த ரவுண் பாடசாலைக்கு இடமாற்றபபட்டிருந்தார்

இவ்வளவு விரைவாக மாற்றம் கிடைக்க காரணமும் இல்லை ஏன் வந்தது என்ற விபரமும் தெரியவில்லை அதற்கான மூலத்தை அறிய அவர் முயற்சிக்கவும் விரும்பவில்லை

முதலில் அதிர்ச்சியாக இருந்தாலும் பின்னர் தன்னை சுதாகரித்துக்கொண்டார். ஆனல் வசந்தாவை விட்டுப்பிரியப்போகின்றேனே என்பதை நினைக்கும் போதுதான் வேதனையாக இருந்தது.

இடமாற்றம் கிடைத்தது பற்றி வசந்தாவுக்குச் சொல்லவில்லை. சொல்லவும் விருப்பமில்லை. தன்னுடைய வேதனையை தனக்குள் தானே அநுபவித்துக் கொண்டு நாட்களை கழித்தார்.



கந்தசாமியும் அதிக கவலையுடன் காணப்பட்டான். அடிக்கடி மாஸ்டரிடம் இடமாற்றம் பற்றி கதைத்தான்.

''யாராவது அரசியல்வாதிகளைப் பிடித்து இடமாற்றத்தை நிறுத்துவோமா?'' என்றுகூட கேட்டான்.

மாஸ்டர் அதற்கு சம்மதிக்கவில்லை 'அதெல்லாம் வீண்வேலை கந்தசாமி என்பணி பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதுதான். அது எந்த இடத்து பிள்ளையாக இருந்தால் என்ன? எல்லாம் ஒரேமாதிரிதான் எல்லா ஊர்பிள்ளைகளும் என்னல் பயன்பெறட்டும். என்று கந்தசாமிக்கு சொன்னுர்.

கந்தசாமி மாஸ்டரை வேதனையுடன் பார்த்துக்கொண்டு

''ஏன்மாஸ்டர் இப்பிடி சொல்லுறியள். இந்த ஊரைப்பிடிக்கவில்லையா? அல்லது பள்ளிக்கூடத்தை பிடிக்கவில்லயா? ஏன் இடம்மாறிப்போக விரும்புகின்றீர்கள்'' எனக்கேட்டாள்.

மாஸ்டர் சிரித்தார்.

''கந்தசாமி அப்பிடி என்னைத் தவருக நினைக்காதே நான் இதுவரை எத்தனையோ இடங்களில் வேலை செய்திருக்கின்றேன் எல்லா ஊர்களும் என் மனத்தை ஒவ்வொரு விதமாக தொட்டு இருக்கின்றன இந்த ஊருக்கு வந்தவுடன் நான் சந்தித்த முதல் ஆள் நீதான் உன்னுடைய அன்பில் என்னை மெய்சிலிர்க்க வைத் உன்னுடைய மரியாதையான பேச்சில் இருந்து இந்த ஊர்மக்களின் பண்பை நான் கணிப்பிட்டுவிட்டேன் என் கனிப்பு பிழையாகவில்லை ஊரும் ஊர்மக்களும் மிக நல்லவர்கள் எல்லோரது அன்பையும் நான் இந்த குறுகிய காலத்தினுள் பெற்றுள்ளேன். அந்த ஆழமான அன்பு என்மீது இருக்கும்போதே நான் இந்த ஊரைவிட்டுப் போக விரும்புகின்றேன்''

கந்தசாமி நீண்டநேரம் மாஸ்டரிடம் விவாதிந்தான் பலன் ஏதும் கிடைக்கவில்லை

''மாஸ்டர் உங்களுக்கு எல்லா மனிதர்களும், எல்லா ஊர்களும் ஒரே மாதிரியாகத்தெரியும். ஆனல் எங்களைப்போல ஆட்களுக்கு உங்களைப் போன்றவர்கள் வித்தியாசமானவர்களாகத் தான் தெரியும். உங்களைப்போன்றவர்கள் ஒழுக்கமான உத்தமமான மனிதர்களை சந்திப்பது அபூர்வமான செயல்தான். அதனல் தான் உங்களைப் பிரிவது எங்களுக்கு வேதனையை தருகின்றது''. என மிகுந்த கவலையுடன் சொன்னுர்.

கந்தசாமி மாஸ்ரருக்கு பள்ளிக்கூடத்தில் பெரிதாக பிரியா விடை எல்லாம் ஒழுங்கு செய்திருந்தான். அவர் அங்கு பணி

யாற்றியகாலம் குறைவாக இருந்தாலும் எல்லோரும் அவரிடம் அதிக ஈடுபாடு காட்டினர்கள். என்பதை அந்த விழாவில் மாஸ்டர் கண்டு கொண்டார்.

நல்ல மனிதர்களுக்கு எப்போதும் மரியாதை உண்டு- மற்றவர்களின் அன்பு இருக்கும் என்பதை நடந்த நிகழ்ச்சிகள் மாஸ்டருக்கு மேலும் உணர்த்தின.

அன்று இரவு பிரியாவிடை முடிந்து மாஸ்டர் வழக்கமான பாதைவழியாக நடந்து கொண்டு வரும்போது மனம் அமைதியில்லாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

அவரை அறியாமலே அவர் மனம இறுதியிலே வசந்தாவிடம் போய் நின்றது. அவளது வேதனை ததும்பும் முகம் தன்னைக் காணும்போது அதில் மெல்லியதாக உண்டாகும் மலர்ச்சி இவையெல்லாம் அவரை நன்ருக வேதனைப்படுத்தின

வீட்டுக்குப்போய் உற்சாகமின்றி உடைகளை மாற்றிக்கொண்டு கிணற்றடிக் கல்லில் அமர்ந்தபோது எல்லாமே சூனியமாக தெரிந்தன.

இன்னும் இரண்டு தியைதான் இருக்கின்றன அவர் ஊரை விட்டு போவதற்கு. இதுவரை அவளிடம் சொல்லாதது மனத்தை நெரிடியது.

இன்றைக்காவது சொல்லுவோமா? சொல்லி என்ன பிரயோசனம் சொல்லாமலே போய்விட வேண்டியது தான் எனவும் நினைத்தார்.

இருந்த இடத்தில் இருந்து பக்கத்து வீட்டு பின் விருந்தையைப் பார்த்தபோது விருந்தை லைட்எரிந்து கொண்டிருந்தது ஆனுல் யாரும் இல்லை.

வசந்தாவைக் காணுதது என்னவோபோல இருந்தது. போவதற்கு இடையில் அவளைக் காணுமலே போய்விடுவேனு? என யோசித்து

இரவு ஒன்பது மணிவரை அந்த இடத்தில் இருந்தும் பிரயோசனம் கிடைக்கவில்லை.

நேரம் அதிகமாக அதிகமாக ஏக்கம் அதிகரித்துக்கொண்டு போனது.

இன்னும் ஒரு இரவுதான் இந்தவீட்டில் மாஸ்டர் இருப்பார் அதன்பிறகு அவர் தனக்கு இடமாற்றம் கிடைத்திருக்கும் இடத்துக்கு போய்விடுவார்.



நாளை முழுக்க வசந்தாவைச் சந்திக்காது விட்டால் பிறகு சந்தர்ப்பமே இல்லை. அதை நிலைக்கும் போது தான் அதிக வேதனை ஏற்பட்டது. அப்படியான ஒரு நிலையினை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

இருளில் தனியே இருந்து யோசித்துக் கொண்டிருக்கும் போது கந்தசாமி அங்கு வந்தான்.

"என்ன மாஸ்டர் செய்யிறியள். யோசனை போல" என்று கேட்ட பின்னர்தான் அவருக்கு எல்லாமே ஞாபகத்திற்கு வந்தது.

கந்தசாமி இரவுச் சாப்பாட்டிற்கு மாஸ்டரை தன்னுடைய வீட்டிற்கு அழைத்திருந்தான்.

"தம்பி—நான் திர மறந்து போனன்" எனச்சொல்லும் போதே வெட்கமாக இருந்தது.

"நான் வீட்டில் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு நீங்கள் நித்திரையாகிவிட்டீர்களோ என்னவோ என நினைத்து வந்தனுன்" எனச் சொன்னுன்.

"தம்பி வாறன் — குறைநினைக்காதே—"எனச் சொல்லி விட்டு கிணற்றில் தண்ணீர் அள்ளி முகம் கழுவ தொடங்கினுர்

முகம் கழுவி முடித்த பின்னர் முகத்தை துடைத்துக் கொண்டிருந்த போதுதான் வசந்தா தங்கள் வீட்டு விருந்தையில் நிற்பது தெரிந்தது.

அவளைக் கண்டதும மனம் ஊஞ்சலாட தொடங்கியது. யோசனையுடன் கிணற்றடியில் நிற்க,

மாஸ்டர் என்ன பிரச்சனை—எங்கோ நேரம் போகுது " என்ருன் கந்தசாமி " அப்படி ஒன்றும் இல்லைத்தம்பி."

"உங்களுக்கு எங்கட ஊரை விட்டுப் போக விருப்பமில்லைபோல இருக்கு ஆனுல் சும்மா சமாளிக்கின்றீங்கள். உண்மையிலே எங்களை பிரிந்து போறது வேதனை போலத்தான் இருக்கு உங்களைப்

போல பார்க்கவே தெரியுது எனச் சிரித்துக் கொண்டு கந்தசாமி சொன்னான்.

அதற்குப் பதில்சொல்லாமலே—

" தம்பி நீர் முன்னால போம். பின்னால வாறன்." என்றார்

" எனக்கு அப்படி ஒரு அவசரமும் இல்லை மாஸ்டர். நீங்களும் வாங்கோ. இரண்டு பேருமாகப் போவம். இரவில் நீங்கள் ஏன் தனிய வருவான்—"

" அதுக்கில்லை தம்பி நீர போய் ஆயத்தப்படுத்துமன்—"

" அங்கை எல்லாம் ரெடி மாஸ்டர்—உங்களைத்தான் பார்த்துக்கொண்டு இருக்கினம் "

மாஸ்டர் நிலை திரிசங்கின் நிலையானது

வசந்தா விருந்தை சுவரோடு சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள். அவரில் தெரிந்த பரபரப்பை அவதானித்த கந்தசாமி—

" மாஸ்டர்—ஏதாவது சிக்கல் என்றால் சொல்லுங்கோ—"

" எனக்கொரு சிக்கலும் இல்லை உமக்கு ஏதாவது அலுவல் இருந்தால் என்னால ஏன் மினக்கெடுவான் என்றுதான் பார்த்தனான்."

" நல்ல இருட்டு. நீங்கள் எங்கடை வீட்டுக்கு வாறது கஸ்டம் ஆனபடியால் கெதியாய் வாங்கோ—" என மீண்டும் கந்தசாமி, தன் பேச்சில் உறுதியாக நின்றான்.

மாஸ்டரால் மேலும் கதைக்க முடியவில்லை ஏதாவது கதைத்தால் கந்தசாமி தன்னைத் தவறாக நினைத்து விடுவான் என நினைத்துப் புறப்பட்டார்.

ஆனால் மனத்திற்குள் வசந்தாவை சந்திக்காதது பெரியதவிப்பினை உருவாக்கியிருந்தது. அதனால் கந்தசாமியுடன் நடக்கும்போது அவரின் மனநிலை அமைதியாக இருக்கவில்லை. அவன் சொல்லுவதற்கெல்லாம் " ம்.. ...ம்... " எனச் சொல்லிக்கொண்டு நடந்தாலும் அவன் பேச்சை அவர் செவி மடுக்கவில்லை.

திடீர் எனக் கந்தசாமி கேட்டான் " மாஸ்டர் உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா."



" என்ன. "

" உங்கடை பக்கத்து வீட்டுக்காரரைப் பற்றித்தான்.'

பக்கத்து வீடு என்றதும் மாஸ்டர் அதிர்ந்து போனார், இவ்வளவு நேரமும் குழம்பிப் போயிருந்த மனம் மேலும் குழம்பியது.

" அவர்களுக்கு என்ன "

" அந்த வீட்டில இருக்கிற வசந்தாவை தெரியும் தானே நீங்கள் முந்தி விசாரித்த அந்தப் பெண் தான்."

" ம் " என்றார் மாஸ்டர்

அவரால் மேலும் ஏதாவது கதைக்க முடியவில்லை

" அவளைப்பற்றி—இப்போ கொஞ்சநாளாய்—கூடாமல் கதைக்கினம். "

" ம் "

" வசந்தாவின் தமக்கை—சகுந்தலா தான் இதுபற்றிச் சொன்னாளாம் யாரோ—வசந்தாவுக்கு பலகாரம் எல்லாம் வாங்கிக் கொடுக்கினமாம் அவளும் யார் என்று சொல்லுறாள் இல்லையாம்."

" அப்பிடியா " எனக்கேட்டாலும், அவர் குரல் நடுங்கத் தொடங்கியது.

" மாஸ்டர் ஒரு வேடிக்கை பாருங்கோ—சிலபேர் உங்களைக் கூட தவறாய் நினைக்கினம். நீங்கள்தான் பக்கத்து வீடு என்றபடியால் வித்தியாசமாய் கதைக்கத்தொடங்கிச்சினம். ஊரில இருக்கிற பெரிய ஆட்கள் அப்படிக் கதைச்ச ஆட்களை கண்டபடி பேசிப்போட்டினம். மாஸ்டரைப்பற்றி இப்படி கதையாதேங்கோ. அவர் எவ்வளவு நல்லவர் அவரைப்போய் தவறாய் நினைக்கிறீங்களே-மடையன்கள் என்று நல்லாய் வருத்தப்பட்டினம்."

கந்தசாமி சொல்லிக்கொண்டு போக மாஸ்டரின் மனநிலை வெகுவாகப் பாதிப்புற்றது.

" ஏன் பேசாமல் வாறீங்கள் மாஸ்டர்-" கந்தசாமி கேட்க

" ஒன்றுமில்லை-நான் என்னத்தை சொல்லுறது என்றுதான் பேசாமல் வாறன்" என்றார் மாஸ்டர்.

இந்தக் கதைக்காக—நீங்கள் மனத்தைப் போட்டுக்குழப்ப வேண்டாம். நான் இதைப்பற்றி சொல்லியிருக்க கூடாது தான்
"அதில ஒன்றுமில்லை."

"நீங்கள் என்னை தவறுக நினைக்கக்கூடாது மாஸ்டர்—நான் இவ்வளவு நாளும் சொல்லக்கூடாது என்றுதான் இருந்தனுன்' பிறகும் மனம் கேட்கேல்லை, எப்போதாவது யாரும் உங்களிட்டை இது பற்றி கேட்டால் மனம் வேதனைப்படும், விசியத்தை நீங்கள் அறிந்தால் உங்களால நடந்ததை விளக்கலாம் தானே—அதால தான் சொன்னனுன். இதோடை இந்த விசியத்தை விட்டிடுங்கோ—என்ன மாஸ்டர் மனத்திலை வைச்சு துன்பப்பட்டு உங்கடை நல்ல மனத்தை நோக வைச்ச பெயரை எனக்குதந்திடாதேங்கோ—". என உருக்கமாக வேண்டினுன் கந்தசாமி.

"தம்பி—நீர் ஏன் வீணுய் கவலைப்படுகிறீர்— நான் ஒன்றும் இதைப் பெரிசாய் எடுக்கேல்லை--" என்று சொன்னுலும் மாஸ்டரின் மனத்தில்—அப்போது புயல் அடிக்க ஆரம்பித்திருந்தது.

கந்தசாமி வீட்டு விருந்தைககூட அவரால் சுவைத்து சாப்பிட முடியாமல் வீடு வந்து சேர்ந்தார்

இரவு அவரால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியவில்லை. நித்திரை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது தான்—இதுவரை காலமும் செய்த செயல்கள் தவறுனவை என்று நினைக்கத் தொடங்கினுர்.

வசந்தா மீது அனுதாபம் காட்டியது. அவளுடன் கதைத்தது, அன்பு வைத்தது, சகுந்தலா அடிக்கும் போது போய்த்தடுத்தது உணவு கொடுத்தது, வேறு தின்பண்டங்கள் வாங்கி உபகாரம் செய்தது, காணும் போதெல்லாம் ஆறுதல் வார்த்தைகள் கூறியதெல்லாம் வீண் செயல்களா—?

எந்த அடிப்படையில் நான் இவற்றை செய்தேன். எந்த நோக்கத்திற்காக செயல் பட்டேன். பெண் என்பதால் இரங்கினேனு? அல்லது அவளின் கொடிய சூழ்நிலையால் பரிதாபப்பட்டேனு? எனப் பலவாறு தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

தான் இவ்வாறு நடந்து கொண்டவைகள் பிறருக்குத் தெரியாமலே தன்மீது சந்தேகங் கொண்டவர்கள் இதுவரை காலமும் செய்த செயல்களை கேள்விப் பட்டால் என்ன நினைப்பார்கள்; நான்செய்தவை எல்லாம் மனிதாபிமானத்துடன் செய்தவை என்பதை அங்கீகரிப்பார்களா?



இத்தனை நாட்களாக தனக்கு இருந்த மரியாதை. இப்போதும் கந்தசாமி போன்றவர்கள் வைத்திருக்கும் மதிப்பு எல்லாமே கெட்டுவிடுமா? அல்லது நான் கெடவைத்து விடுவேனு? என்றெல்லாம் நினைத்தார்.

இன்னும் ஒருநாள் இன்றைய இரவைவிட இன்னுமொரு இரவு அதையும் கஷ்டப்பட்டு கழித்து விட்டால்-புதிய இடத்திற்கு போய்விடலாம். அதற்கிடையில் இருக்கிற மரியாதையை கெடுத்து விடக்கூடாது.

அப்படியென்றுல் போவதற்கிடையில் வசந்தாவை சந்திக்க கூடாது. சந்திக்காமலே போய்விட வேண்டியது தான் என்று முடிவு செய்தார்.

ஆனுல் அந்தச் சமயத்தில் அவர் நினைவில் வசந்தா வந்தாள்

அவள் முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது. அவள்

மெதுவாக மாஸ்டரைப் பார்த்து புன்னகைத்தாள்.

ஆனுல் மாஸ்டரின் மனமோ கிணற்று மிதியில் நின்று கிணற்றை எட்டிப் பார்ப்பவரை போல கஸ்டப்பட்டார். யாராவது கண்டால். போற நேரத்தில் பெரிய உபத்திரவமாகிவிடும் என யோசித்தார்.

அந்த யோசனையின் விளைவாக-சிரித்ததுடன் இடத்தை விட்டு போகும்படி மனம் கட்டளையிட்டது. ஆனுல் போகமுடியவில்லை சிலையாக நின்றுர், அசையவில்லை.

எதிரும் புதிருமாக இருவரும் நிற்கையில் அவள்தான் முதலில் பேச்சை தொடக்கினுள்.

ஒரு விசியம்!"

"என்ன-"

"இல்லை- நான் கேள்விப்பட்டேன். உங்களுக்கு இடமாற்றமாம் உண்மையா-"

உயரமான இடத்தில் நின்று தலைகீழாக விழுந்த நிலைக்கு மாஸ்டர் உள்ளானார் எதற்காகப் பயந்தாரோ - எதை சொல்லக் கூடாது என்று நினைத்தாரோ அது நடந்து விட்டது.

"உண்மைதான்"

"அப்ப- ஏன் எனக்குச் சொல்லவில்லை." எனவசந்தா அடுத்தகேள்வியைப் போட்டதும் மாஸ்டர் கூனிக்குறுகிப்போனார்.

என்ன பதிலைச் சொல்வது.

"எனக்கு சொல்லாமல்ல போகலாம். என்று நினைச்சீங்களோ-" என சிரித்துக் கொண்டு கேட்க,

இல்லையில்லை-சொல்லத்தான் நினைத்தேன்-சந்தர்ப்பம் சரியாய் வரவில்லை - எப்படியும் சொல்லி விட்டுத்தான் .. ...வார்த்தைகளை பூரணப்படுத்தாமல் மாஸ்டர் தடம் புரண்டார்.

"இடமாற்றம்-பொய் இல்லைத்தானே-நான் முதலிலே நம்

பேல்லை-"

"இல்லை - உண்மையாகத்தான்-"

"இவ்வளவு விரைவாக ஏன் இடமாற்றம் கிடைக்க வேணும்-"

"எனக்கும் தெரியேல்லை. இடமாற்றம் கிடைத்தால் போகத்தானேவேணும். அரசாங்க சேவையில் இருந்தால் அப்படித்தான்- என்ன செய்யலாம்-"

அவள் என்ன தவறு செய்தாள் - என்னுடன் வித்தியாசமாகக் கூடப் பழகவில்லையே- நான் எதற்காக மற்றவர்களைக் கண்டு பயப்படவேண்டும்.

என் மூலம் ஆறுதல் அடைந்த பெண்ணிடம் சொல்லிக் கொள்ளாமல் போவது - எவ்வளவு ஈனமான செயல்- தனியே என்னுடைய மதிப்பு-மரியாதை என்ற சுயநலங்களுக்காக மென்



மையான சுபாவம் கொண்ட பெண்ணை. அவளுக்கு சொல்லி விட்டுப்போகாமல் போவதன் மூலம் துன்பப்படுத்த வேண்டுமா.

எதுசரி எதுபிழை, நான் எப்படி முடிவு எடுக்கவேண்டும் என்று தன்னையே குட்டையாக குழப்பி- அதில் உழரும் எருமை மாடு போல் உழன்று.

இறுதியில் வசந்தாவை சந்திக்காமல் இதுவரை காலமும் சந்தித்தனத! கனைத்த்தை எல்லாப் கெட்டகலவாக பறந்து ஊரைவிட்டு போய் விடுவதுதான் சரியானசெயல் என்றுமுடிவு செய்தபோது.

பொழுது விடிந்தது.

இன்று வீட்டில் நின்றால் பிரச்சனை-வசந்தாவை சந்திக்கும் சந்தர்ப்பத்தை தானாக ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என முடிவு செய்து -காலையிலேயே வீட்டை விட்டுப்போனவர்தான் மாலையில்தான் திரும்பி வந்தார்.

அன்று இரவு கழிந்து விட்டால் விடிய மாஸ்டர் பயணமாகி விடுவார்.

தான் கொண்டு போக வேண்டிய சாமான்களை எல்லாம் ஒழுங்கு படுத்தி விட்டு கிணற்றடிக்கு வந்தார். வசந்தாவீட்டுப்பக்கம்பார்க்க மனம் சலனப்பட்டது. ஆனால் பார்க்கவில்லை.

விரைவாக முகத்தைக் கழுவிக் கொண்டு- தான் தோய்த்து காலையில் போட்ட உடுப்புக்களை எடுத்துக் கொண்டிருந்த போது வேலிப்பக்கமாகச் சரசரவென்ற சத்தம் கேட்டது.

மாஸ்டர் திடுக்குற்றுப் போனார் - தன்னை சுதாகரித்து, வேலிப் பக்கம் பார்த்த போது-அங்கு வசந்தா நின்று கொண்டிருந்தாள.

மலர்ச்சியாக இருந்த வசந்தாவின் முகத்தில் சட்டென்று இருள் படர்ந்தது. கண்கள் கலங்க ஆரம்பித்தன.

"நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்-" என்று கூறிக் கொண்டு அவள் அழ ஆரம்பித்தாள்.

மாஸ்டரின் மனம் கரைய ஆரம்பித்தது. அவர் கொண்டிருந்த உறுதிகள் தவிடு பொடியாகின.

"நீங்கள் அழவேண்டாம்- என்ன செய்வது காலம் சில வேளை எங்களுடன் ஒத்துழைப்பதில்லை. எனக்கு ஒன்றுமே புரிய வில்லை உங்களை விட்டுப்பிரிவது துன்பமாகத்தான் உள்ளது. என்றாலும் என்னால் என்னதான் செய்ய முடியும்.

அவள் மாஸ்டரை நுட்பமாக பார்த்தாள்,

"நீங்கள் ஒன்று செய்யலாம்" என்று கூறும்போதே விழிகள் பளபளப்பில் மின்னின,

"என்ன"

"நானும் உங்களுடன் வருகின்றேன்-இந்த நரக வாழ்க்கையில் இருந்து மீட்சி பெற எனக்கு உதவி செய்யுங்கள்-" என அழுது கொண்டு சொன்னாள்.

மாஸ்டரின் உதடுகள் அசைய மறுத்தன அவர் பதிலேதும் கூறவில்லை.

கண்களைத் துடைத்துக் கொண்டு

"நான் ஒரு மடைச்சி உங்களை அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள் கெட்டு சீரழிந்து போனவளுக்கு வாழ்க்கை உண்டா? எனக்கூறும்போது கண்ணீர் பழையபடி பெருக ஆரம்பிக்க, தனது சேலைத் தலைப்பால் கண்ணீரை நீக்க முனைந்தாள்.

"தயவு செய்து அழாதீர்கள்" என மாஸ்டர் சொல்லிக் கொண்டு தன் கண்ணீரையும் துடைத்தார்.

"என்னைத் தவறாக நினைத்து விடாதீர்கள். நான் என்னவோ உங்களுடன் ஒரு வேலைக்காரியாக கூட வருவதை விரும்புகின்றன் உங்கள் அன்பும், பழகும்விதமும், மனிதத்தன்மையும் என்னை வெகுவாக கவர்ந்தன. உண்மையில் வாழ்க்கையில் வெறுப்புற்று இருந்தஎனக்கு உங்களது அறிமுகம்கிடைத்த பின்னர்தான்கொஞ்சமாவது வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டது. நாள் முழுக்க நான் படுகின்ற துன்பங்களைக் உங்களைக்காணும் போது போக்கிக் கொள்வேன்-வெளி விறாந்தைச் சுவரோடு சாய்ந்திருந்தாலும் மனமோ உங்களை தேடிக்கொண்டிருக்கும் இதை நான் தவறாக



நினைக்கவில்லை. பிழையான செயலாகவும் கருதவில்லை. ஏதோ என்மன ஆறுதலுக்காக ஒரு பழக்கமாகக் கைகொள்ளத் தொடங்கினேன் — மனவேதனைப்படும்போது நாங்கள் தெய்வத்தை நினைப்பதில்லையா? அது மாதிரித்தான் —" என அவள் சொல்லிக் கொண்டு போனாள்.

மாஸ்டர் மௌனமாக — அவள் உணர்ச்சி பூர்வமாக சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"உங்களுக்கு இருக்கும் மதிப்பும் எனக்கு தெரியும்; இந்த ஊருக்கு நீங்கள் வந்து கொஞ்சக் காலம்தான் ஆகின்றது அதற்கிடையில் உங்களுக்கு ஊரில் ஏற்பட்ட மரியாதை பற்றி நான் அறிவேன். அந்த மதிப்பும் மரியாதையும் என்னால் கெடக் கூடாது. என்பதால் தான் உங்களைக் காண்பதை நேரடியாக சந்திப்பதைக் குறைத்துக் கொண்டேன். உங்களை தூரத்தே தரிசித்து — தூரத்தில் இருந்தே ஆறுதல் பெற்று என்னளவில் என்னை சமாதானம் செய்து கொள்வேன்: உண்மையாக உங்கள் மதிப்பு, மரியாதையைக் கெடுக்க நான் விரும்பமாட்டேன் உங்களுடன் வர எனக்கு விருப்பம். இருந்தாலும் அவற்றுக்காக நா என் மன உணர்வுகளை எனக்குள்ளேயே ஆழப் புதைத்துக் கொள்வேன். சற்று முன்னர் நான் சொன்னவைகளை பெரிதாக எடுக்க வேண்டாம் — என் மன உணர்வுகள் என்னுள்ளேயே இருக்கட்டும். — நானோ கெட்டுப் போனவள். ஒருதடவை கெட்டாலும், ஒன்பது தடவை கெட்டவள் என்ற மாதிரித்தான் சனங்கள் கதைப்பார்கள். இந்த ஊரில இருக்கிற ஆட்களும் — என் அக்காகூட நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவனுடன் படுக்கை விரிப்பதாகத்தான் நினைக்கிறார்கள். நான் நம்பி மோசம் போனேன் என்பதை யார் உணருவார்கள். வாழ்க்கையிலே எந்தப் பெண்தான் தானாக விரும்பி கெட்டுப் போகிறாள். — இதை யாரும் ஏன் உணருகின்றார்கள் இல்லை. யோசித்துப் பார்த்தால் எவ்வளவு வேதனை - செத்துப் போனால் கூட இத்தகைய கவலைகள் தீர்ந்து விடாது.

என்னைப் பற்றி எப்படியும் கதைக்கட்டும். அது எனக்குப் புதிதில்லைத்தானே — ஆனால் உங்களைப் பற்றி யாரும் கூடாமல் கதைக்கக் கூடாது. எப்போதும் போல நீங்கள் மதிப்புடனும் மரியாதையுடனும் வாழ வேணும். என் வாழ்க்கையிலே நீங்கள் இந்த வீட்டுக்கு வந்தபிறகு தொடங்கிய நாட்கள் மறக்க முடி

யாத நாட்கள். இந்த மறக்க முடியாத நாட்களுடன் இனிவரும் நாட்களை நான் கழித்து விடுவேன். நீங்கள் சந்தோஷமாக போய் வாருங்கள்—''என கூறி முடித்தாள் வசந்தா—

அவள் குரலில் தெளிவு இருந்தது. உறுதி காணப்பட்டது முகத்தில்கூட சாதாரண மலர்ச்சியை விட புதிய ஒளியும் பிரகாசித்தது.

''அக்கா வந்தால் நீங்கள் நிம்மதியாக போய்கூட சேரமாட்டீர்கள் சந்தோஷமாக போங்கள். எப்போதாவது இந்த ஊர் நினைவுக்கு வந்தால் என்னையும் நினைத்துக் கொள்ளுங்கள்— கடவுள் துணை செய்து நானும் உயிரோடு இருந்தால் உங்களை மீண்டும் சந்திப்பேன் நான் வருகின்றேன்— ''என சொன்னாள்

மாஸ்டரின் விழிகள் கண்ணீரில் ஆழ்ந்து பார்வை மங்கியது. அவர் கண்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்த போது வசந்தாவைக் காணவில்லை.

உள்ளம் பரிதவிக்க மாஸ்டர் வீட்டினுள் புகுந்தார். அன்று இரவு முழுக்க யோசனை— ஒரே யோசனை— யோசிக்க யோசிக்க மிஞ்சியது குழப்பம் தான்—

எப்படியோ வசந்தாவை சந்தித்தாகி விட்டது. ஆனால் அவள் அடி மனத்தில் இருந்த உணர்வுகள்— அவைகளையும் அல்லவா அறிய வேண்டியதாயிற்று—

அவள் சொன்னவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது மனம நெகிழ்ந்தது.

ஆனால்—

நான் என்ன செய்ய முடியும்? என மறுபடியும் யோசிக்க—அவர் தூங்காத இரண்டாவது இரவும் விடிந்தது.

காலை எட்டு மணிக்குத்தான் பஸ்— அதற்கிடையில் பார்க்க வேண்டிய அலுவல்களை பார்த்து— குளித்து முடித்தார்.

காலை ஏழு மணிக்கு கந்தசாமி வருவதாக சொல்லியிருந்தான். அதன் பின்னர் பஸ் நிலையத்திற்கு போவதாக முடிவு



மாஸ்டர் வெளிக்கிட்டு கந்தசாமியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்— இன்னமும் கந்தசாமி வரவில்லை: அதற்கிடையில் வசந்தா நின்றால் ஒருதடவை பார்ப்போம் என நினைத்துக் கொண்டு பின் பக்கம் வந்தபோது—

வசந்தா இல்லை— சற்று நேரம் நின்று பார்த்து விட்டு கந்தசாமி வந்தாலும் என நினைத்து முன்னுக்கு போக நினைக்கும் போது

''போடி— உள்ளே—'' சகுந்தலாவின் வழக்கமான பேய்ச் சத்தம் கேட்டது:

அப்போது தான் பார்த்தார்—

வசந்தா தென்னை மரமொன்றில் சாய்ந்து நிற்பதையும் சகுந்தலா பக்கத்தில் நின்று கத்துவதையும்—

ஆனால் வசந்தா அசையவில்லை.

''போடி உள்ளே— கேடு கெட்ட நாயே— விடியத்தொடக்கம் ஒரு வேலையும் இல்லாமல்— இந்த தென்னை மரத்தடியில் இருந்து என்னடி செய்யிறாய்''

வசந்தா முன் போலவே இருந்தாள்—

ஆத்திரம் எல்லை மீறிய சகுந்தலா தரையில்கிடந்த தென்னை மட்டை ஒன்று எடுத்து—

''போடி—போடி—'' என்று கத்திக் கொண்டு அடிக்கத் தொடங்கினாள்—

மாஸ்டரின் மனம் பதை பதைக்க தொடங்கியது: விரைவாக தன்னிலை மறந்து பிரிந்து போயிருந்த வேலியை நோக்கி ஓடினார்— ஆனால் - பிறகு என்ன நினைத்தாரோ— தனது வீட்டின் முன் பக்கம் வந்து— படலையூடாக ஒழுங்கைக்கு வந்து வசந்தாவின் வீட்டின் முன் கதவால் போய்—

''வசந்தா— வசந்தா—'' எனக்கூப்பிட்டார்—

அவரது அந்த கணீர் என்ற சத்தம் பின்னுக்கு கேட்ட போது சகுந்தலா முன்னுக்கு ஓடி வந்தாள்—பின்னால் வசந்தா வந்தாள்

''வசந்தா— வா— நாங்கள் போவம்—'' என்றார் உறுதியான குரலுடன் ''என்ன—'' என்றாள் சகுந்தலா—

''எனக்கு உங்களோடை கதையில்லை— வசந்தா வா—'' என்று சொல்லி முன்னே நடக்க வசந்தா பின்னால் நடந்தாள்—

''அடியேய்— நீ உண்மையில் கேடுகெட்டவள் தான்— ஒருதனால் கெட்டுப்போய்-- இன்னொருவனைக் கெட வைக்கிறாய்—'' என சகுந்தலா பேசிக் கொண்டிருக்கும் போது—அவர்கள் தெருவில் இறங்கி விட்டார்கள்.

கூடிவிட்ட சனங்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கையில்—கந்தசாமியும் வருவது தெரிந்தது.

(முற்றும்)



HY VI...YAGAR
SARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

EE/22

SITHY VINAYAGAR
EK-154
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

மிகச் சிறு வயது தொடக்கம் எழுத ஆரம்பித்து கடந்த பதினைந்கு வருடங்களாகத் தொடர்ந்து எழுதி வரும், இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் அவர்கள் நாவல், குறுநாவல், சிறுகதை, கட்டுரை, வானொலி-மேடை நாடகங்கள் முத லான இலக்கியப் பங்களிப்புக்களின் மூலம் தமிழ்த் தாய்க்கு அணி செய்து வருபவர்.



வணிகத்துறை பட்டதாரியான (B. Com) இவர் தற்போது யாழ்ப் பாணம் அரச செயலகத்தில் பணி யாற்றி வருகின்றார்.

ஈழத்தின் பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்றவற்றில் ஏராள மான சிறுகதைகளை எழுதியுள்ள இவரது ''பூமிவட்டமானது தான்'' (மல்லிகை ஏப்ரல்/மே 1984) தருணி என்ற பத்திரிகையிலும் ''அகதிகள் முகாம்'' (மல்லிகை அக்டோபர் 1985) சிலுமின என்னும் பத்திரிகை யிலும் கே. ஜீ. அமரதாசா அவர்களினால் சிங்களத்தில் மொழிபெயர்க் கப்பட்டு வெளியாகியுள்ளன.

பொருளாதார பிரச்சனைகள், சீதனக் கொடுமை, சமூக ஊழல் கள், போலி வேடதாரிகளின் கபட நாடகங்கள் போன்ற பல்துறை கருப்பொருள்களை கொண்ட சிறுகதைகளை எழுதும் ஆற்றல் பெற்றத னாலும் கதை சொல்லும் திறனாலும் தனக்கென அநேக வாசகர்களைக் கொண்டு உள்ளவர்.

அரசாங்க சேவையில் எழுது வினைஞராக இருந்தவரும், அ[illegible] சூர் கலைஞருமான, எனது நண்பர் காலம் சென்ற இணுவை[illegible] த. சிதம்பரநாதன் (தம்பையா சிதம்பரநாதபிள்ளை) அவர்களின் சிரேஷ்ட புத்திரன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'சசி பாரதி'